



புவனம் போற்றும் பூவணம்

பாரிசாத மரத்தின் அடியில்

பூவாய் முளைத்த பூவணநாதர்



திருஞானசம்பந்தர் தரிசிக்க வேண்டிச் சாய்ந்திருக்கும்
திருநந்தி தேவர்

காசிஸ்ரீ கி. காளைராசன்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

நூல் விவரம்
நூல் பெயர் - புவனம் போற்றும் பூவணம்
நூற் பொருள் – திருப்பூவணம் மூவர் பாடலும் பெற்ற பாண்டிய நாட்டுத் திருத்தலம். இது மதுரையின் கிழக்கு எல்லையாக உள்ளது. இதன் சிறப்புகள் சுருக்கமாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன. திருப்பூவணப் புராணம், திருவிளையாடற் புராணம் திருமுறைப் பாடல்கள் இவற்றில் உள்ள கருத்துக்கள் இப் புத்தகத்தில் சுருக்கிக் கூறப்பெற்றுள்ளன.
நூல் ஆசிரியர் மற்றும் நூல் உரிமை - காசிஸ்ரீ முனைவர் நா.ரா.கி. காளைராசன், M.A., M.Phil., Ph. D., (திருப்பூவணம் புராணம் - முனைவர் பட்ட ஆய்வாளர்) துணைப்பதிவாளர் (பணி ஓய்வு), அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி 630003. email : kalairajan26@gmail.com WhatsApp: 94435 01912 Phone : 824 826 6418
அச்சிட்டோர் - பிரிண்டெக், 7, மைக்கேல் மூப்பனார் வீதி, பழைய குயவர்பாளையம் ரோடு, மதுரை - 625 009. தொலைபேசி : 0452-2335748
நூல் வடிவம் - புத்தகம் A 6 அளவு **இணையப் பதிப்பு** – A5 அளவு, ***எழுத்து -*** ஒருங்குறி
பக்கங்கள் – 88
நூல் வெளியீடு - 24 செப்டம்பர் 2007 **மின்னூல் வெளியீடு** - 04 நவம்பர் 2025
விலை - இலவச இணையப் பதிப்பு

காசிஸ்ரீ கி. காளைராசன்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

புவனம் போற்றும் பூவணம்

பூமிக்கும் முந்தியவர் பூவணநாதர்
ஆற்றுக்கும் முந்தியவ அழகுமீனா



மின்னம்மை உடனாய அழகியபிரான்

திருப்பூவணப் புராணம், திருவிளையாடற் புராணம் திருமுறைப் பாடல்கள் இவற்றில் உள்ள கருத்துக்கள் இப் புத்தகத்தில் சுருக்கிக் கூறப்பெற்றுள்ளன

நூலாசிரியர் :
கி. காளைராசன் B.Sc., M.A., M.Phil., PGDCA.,
உதவிப் பதிவாளர்
அழகப்பா பல்கலைக் கழகம்
காரைக்குடி – 630 003
அலைபேசி : 94435 – 01912

அச்சிட்டோர்
பிரிண்டெக்
7, மைக்கேல் மூப்பனார் வீதி,
பழைய குயவர்பாளையம் ரோடு
மதுரை – 625 009.
தொலைபேசி : 0452 – 2335748

நன்கொடை
ரூ. 15/-

2

புவனம் போற்றும் பூவணம்

1. அறிந்து செய்த பாவங்களைப் போக்கும் சிவலிங்கம் எது?
2. 1728கோடி வருடம் பூமிக்குள்ளே புதைந்திருந்த சிவலிங்கம் எது?
3. பார்வதி தேவியார் தவம் செய்ததால் சுயம்புவாகப் பூமியில் முளைத்த ஜோதிலிங்கம் எது?
4. கல் இல்லை, பாரிசாதப் பூவால் ஆன சிவலிங்கம் எது?
5. நறுமலர் கொண்டு வணங்குபவருக்கு அரச பதவி வழங்கும் சிவலிங்கம் எது?
6. மடப்புரம் காளி வணங்கிய சிவலிங்கம் எது?
7. மூவேந்தர்களும் ஒன்றாய் வந்து திறை செலுத்தி வணங்கிய சிவலிங்கம் எது?
8. எலும்பு பூவாய் மாறிய திருத்தலம் எது?
9. பிதிர்களுக்கு முத்தி அளிப்பதில் காசியைவிடச் சிறந்த திருத்தலம் எது?
10. மதுரையிலிருந்து சிவபெருமான் சித்தர் வடிவில் வந்து இரசவாதம் செய்த திருத்தலம் எது?

புவனம் போற்றும் பூவணம்

1. அறிந்து செய்த பாவங்களைப் போக்கும் சிவலிங்கம் எது?

2. 1728கோடி வருடம் பூமிக்குள்ளே புதைந்திருந்த சிவலிங்கம் எது?

3. பார்வதி தேவியார் தவம் செய்ததால் சுயம்புவாகப் பூமியில் முளைத்த ஜோதிலிங்கம் எது?

4. கல் இல்லை, பாரிசாதப் பூவால் ஆன சிவலிங்கம் எது?

5. நறுமலர் கொண்டு வணங்குபவருக்கு அரச பதவி வழங்கும் சிவலிங்கம் எது?

6. மடப்புரம் காளி வணங்கிய சிவலிங்கம் எது?

7. மூவேந்தர்களும் ஒன்றாய் வந்து திறை செலுத்தி வணங்கிய சிவலிங்கம் எது?

8. எலும்பு பூவாய் மாறிய திருத்தலம் எது?

9. பிதிர்களுக்கு முத்தி அளிப்பதில் காசியைவிடச் சிறந்த திருத்தலம் எது ?

10. மதுரையிலிருந்து சிவபெருமான் சித்தர் வடிவில் வந்து இரசவாதம் செய்த திருத்தலம் எது ?

11. சமணர்களை வெல்ல மதுரை செல்லும் முன்பு, திருஞானசம்பந்தர் வழிபட்ட திருத்தலம் எது?

12. சமணர்களை வெற்றி கொண்ட பின்பு திருஞானசம்பந்தர் வழிபட்ட திருத்தலம் எது?

13. திருஞானசம்பந்தருக்கு ஆற்று மணல்கள் எல்லாம் சிவலிங்கங்களாகக் காட்சியளித்த திருத்தலம் எது?

14. நந்தியைச் சாய்ந்திருக்கச் சொல்லித் திருஞான சம்பந்தருக்குச் சிவ்லிங்கம் காட்சியளித்த திருத்தலம் எது?

15. மூவர் தேவாரமும் பெற்ற பாண்டியநாட்டுத் திருத்தலம் எது?

16. தியானகாட்ட முனிவர், மாத்தியாந்தினி முனிவர், கோரக்கச் சித்தர், கத்திரிகாய் சித்தர் இவர்களின் சீவ சமாதி உள்ள திருத்தலம் எது?

இச்சிறப்புகளையும் இன்னும்
எண்ணிலடங்காச் சிறப்புகளையும் பெற்றது
திருப்பூவணம்
(மதுரைக்கு அருகில் உள்ள திருப்புவனம்)

11. சமணர்களை வெல்ல மதுரை செல்லும் முன்பு, திருஞானசம்பந்தர் வழிபட்ட திருத்தலம் எது?

12. சமணர்களை வெற்றி கொண்ட பின்பு திருஞானசம்பந்தர் வழிபட்ட திருத்தலம் எது?

13. திருஞானசம்பந்தருக்கு ஆற்று மணல்களெல்லாம் சிவலிங்கங்களாகக் காட்சியளித்த திருத்தலம் எது?

14. நந்தியைச் சாய்ந்திருக்கச் சொல்லித் திருஞானசம்பந்தருக்குச் சிவலிங்கம் காட்சியளித்த திருத்தலம் எது?

15. மூவர் தேவாரமும் பெற்ற பாண்டியநாட்டுத் திருத்தலம் எது ?

16. தியானகாட்ட முனிவர், மாத்தியாந்தினி முனிவர், கோரக்கச் சித்தர், கத்திரிகாய் சித்தர் இவர்களின் சீவ சமாதி உள்ள திருத்தலம் எது?

இச்சிறப்புகளையும் இன்னும் எண்ணிடலங்காச் சிறப்புகளையும் பெற்றது **திருப்பூவணம் (மதுரைக்கு அருகில் உள்ள திருப்புவனம்)**

உ
திருப்பூவணம் ஸ்ரீ கற்பக விநாயகர் துணை
திருப்பூவணநாதர் துணை
புலிக்கரை ஐயனார் துணை

புவனத்தின் சிறப்பு

- ❖ அண்டத்தில் பூமியைத் தவிர வேறெங்கும் உயிரினங்கள் இருப்பதாக இதுநாள் வரை கண்டறியப்படவில்லை.
- ❖ உயிரினங்கள் வாழ்வதாலேயே சூரிய மண்டலத்தில் பூமி சிறப்புடையதாகிறது. பூமியில் வாழ்கின்ற உயிரினங்களுள் அறிவினால் மனிதஇனம் சிறப்புடையதாக உள்ளது.
- ❖ பண்டைக்காலத்தில் பிற கண்டங்களில் மனிதர்கள் இனக் குழுக்களாக வாழ்ந்து உள்ளனர். ஆனால், அப்பழமையான காலத்திலேயே, இந்தியத் திருநாட்டில், மக்கள் திருக்கோயிலைச் சார்ந்து வாழும் பண்பாடு உடையவர்களாய் இருந்து உள்ளனர்.
- ❖ சமயங்கள் பல உள்ளனன. அவற்றுள் மிகவும் பழமையானது இந்து சமயமே ஆகும். இச் சமயத்தில் சிவன், திருமால் மற்றும் பிரமன் ஆகிய மூன்று பெரும் தெய்வங்கள் உள்ளனர்.

பூவணத்துச்சிறப்புகள் :-

- ❖ இறைவன் தலைமையில் சங்கம் வைத்துத் தமிழ் ஆராய்ந்த மதுரையில் சைவத்தையும் மீறிச் சமணர்களின் ஆதிக்கம் ஓங்க ஆரம்பித்தது.

உ
திருப்பூவணம் ஸ்ரீ கற்பக விநாயகர் துணை
திருப்பூவணநாதர் துணை
புலிக்கரை ஐயனார் துணை

புவனத்தின் சிறப்பு

அண்டத்தில் பூமியைத் தவிர வேறெங்கும் உயிரினங்கள் இருப்பதாக இதுநாள் வரை கண்டறியப்படவில்லை.

உயிரினங்கள் வாழ்வதாலேயே சூரிய மண்டலத்தில் பூமி சிறப்புடையதாகிறது. பூமியில் வாழ்கின்ற உயிரினங்களுள் அறிவினால் மனிதஇனம் சிறப்புடையதாக உள்ளது.

பண்டைக்காலத்தில் பிற கண்டங்களில் மனிதர்கள் இனக் குழுக்களாக வாழ்ந்து உள்ளனர். ஆனால், அப்பழமையான காலத்திலேயே, இந்தியத் திருநாட்டில், மக்கள் திருக்கோயிலைச் சார்ந்து வாழும் பண்பாடு உடையவர்களாய் இருந்து உள்ளனர்.

சமயங்கள் பல உள்ளன. அவற்றுள் மிகவும் பழமையானது இந்து சமயமே ஆகும். இச் சமயத்தில் சிவன், திருமால் மற்றும் பிரமன் ஆகிய மூன்று பெரும் தெய்வங்கள் உள்ளனர்.

பூவணத்துச்சிறப்புகள்:-

இறைவன் தலைமையில் சங்கம் வைத்துத் தமிழ் ஆராய்ந்த மதுரையில் சைவத்தையும் மீறிச் சமணர்களின் ஆதிக்கம் ஓங்க ஆரம்பித்தது.

மன்னனையும் மக்களையும் மீண்டும் சைவத்திற்கு மாற்ற வேண்டித் திருஞானசம்பந்தரை அழைத்து வரச் செய்தார் மங்கையர்க்கரசியார். அரசியாரின் அழைப்பை ஏற்று மதுரை செல்லும் வழியில் திருப் பூவணம் வருகிறார்.

- ❖ திருப்பூவணம் மதுரைக்குக் கிழக்கு வாயிலாகும்.
- ❖ இதனால் மதுரை சோமசுந்தரரை வணங்குவதற்கு முன் திருப்பூவணநாதரை வணங்குவது சிறப்புடையது.
- ❖ எனவே, திருஞானசம்பந்தர் மதுரைக்குச் செல்வதற்கு முன்பு திருப்பூவணநாதரை வணங்கி வழிபட வருகிறார்.
- ❖ வழியில் வைகை ஆற்றின் வடகரையில் அம்மாள் ஆடி மாதம் தவம் செய்த இடம் (ஆடித்தபசு மண்டபம்) உள்ளது.
- ❖ திருஞானசம்பந்தர், ஆடித்தபசு மண்டபம் உள்ள இடத்திலிருந்து தென்கரையில் உள்ள திருப்பூவண நாதர் கோயிலுக்குச் செல்ல வேண்டி வைகை ஆற்றில் இறங்குகிறார். அப்போது ஆற்றின் மணல்களெல்லாம் சிவலிங்கங்களாகக் காட்சியளித்துள்ளன.
- ❖ எனவே திருஞானசம்பந்தப் பெருமான் ஆற்றில் காலை வைக்காமல் "ஆடித்தபசு மண்டபம்" உள்ள இடத்திலிருந்தபடியே 'தென்திருப் பூவணமே' என்று முடியும் பதிகம் பாடித் திருபூவணநாதரை வணங்குகிறார்.

மன்னனையும் மக்களையும் மீண்டும் சைவத்திற்கு மாற்ற வேண்டித் திருஞானசம்பந்தரை அழைத்து வரச் செய்தார் மங்கையர்க்கரசியார். அரசியாரின் அழைப்பை ஏற்று மதுரை செல்லும் வழியில் திருப் பூவணம் வருகிறார். திருப்பூவணம் மதுரைக்குக் கிழக்கு வாயிலாகும். இதனால் மதுரை சோமசுந்தரரை வணங்குவதற்கு முன் திருப்பூவணநாதரை வணங்குவது சிறப்புடையது.

எனவே, திருஞானசம்பந்தர் மதுரைக்குச் செல்வதற்கு முன்பு திருப்பூவண நாதரை வணங்கி வழிபட வருகிறார். வழியில் வைகை ஆற்றின் வடகரையில் அம்மாள் ஆடி மாதம் தவம் செய்த இடம் (ஆடித்தபசு மண்டபம்) உள்ளது.

திருஞானசம்பந்தர், ஆடித்தபசு மண்டபம் உள்ள இடத்திலிருந்து தென்கரையில் உள்ள திருப்பூவணநாதர் கோயிலுக்குச் செல்ல வேண்டி வைகை ஆற்றில் இறங்குகிறார். அப்போது ஆற்றின் மணல்களெல்லாம் சிவலிங்கங்களாகக் காட்சியளித்துள்ளன.

எனவே திருஞானசம்பந்தப் பெருமான் ஆற்றில் காலை வைக்காமல் “ஆடித்தபசு மண்டபம்” உள்ள இடத்திலிருந்தபடியே 'தென்திருப் பூவணமே" என்று முடியும் பதிகம் பாடித் திருபூவணநாதரை வணங்குகிறார்.

- திருப்பூவணநாதர் (சிவபெருமான்), நந்தியைச் சாய்ந்திருக்கச் சொல்லி காட்சியருளுகிறார்.
- இதனால் திருப்பூவணத்தில் சிவலிங்கத்தை நந்தி இன்றும் மறைக்காது. ஆற்றின் மறுகரையிலிருந்தே சிவலிங்கத்தை வழிபடலாம்.
- ஆடித்தபசு மண்டபத்திற்கும், கோயிலுக்கும் நடுவே, ஆற்றின் குறுக்கே ஆயிரக்கணக்கான சிவலிங்கங்கள் புதையுண்டு கிடக்கின்றன.
- ஆற்றின் நடுவே, ஆலயம் ஒன்று இருந்துள்ளது. தற்போது சிதைவடைந்து கிடக்கிறது. இதனை மீண்டும் யார் கட்டுகிறார்களோ அவர்கள் செய்யும் செயல்கள் அனைத்தும் நான்குமடங்கு புண்ணியத்தை உண்டாக்கும்.
- திருப்பூவணநாதரின் திருவருளைப் பெற்ற பின்னர் திருஞானசம்பந்தர் மதுரை சென்று சமணர்களை வெற்றி கொள்கிறார். மதுரையிலிருந்து வைகை ஆற்றின் தென்கரை வழியே மீண்டும் திருப் பூவணத் திருக்கோயிலுக்கு வந்து ‘அடிதொழ நன்மையாகுமே’ என்று முடியும் பதிகம் பாடித் திருப்பூவணநாதரை வணங்கி வழிபட்டுள்ளார்.
- இதனால் மதுரையில் சைவத்தையும் தமிழையும் தழைக்கச் செய்த பெருமையில் திருப்பூவண நாதருக்குப் பெரும் பங்குண்டு.
- திருஞானசம்பந்தர் வழியில் அப்பரும், சுந்தரரும், மாணிக்கவாசகரும், கரூர்த்தேவரும், அருணகிரி

திருப்பூவணநாதர் (சிவபெருமான்), நந்தியைச் சாய்ந்திருக்கச் சொல்லி காட்சியருளுகிறார். இதனால் திருப்பூவணத்தில் சிவலிங்கத்தை நந்தி இன்றும் மறைக்காது. ஆற்றின் மறுகரையிலிருந்தே சிவலிங்கத்தை வழிபடலாம்.

ஆடித்தபசு மண்டபத்திற்கும், கோயிலுக்கும் நடுவே, ஆற்றின் குறுக்கே ஆயிரக்கணக்கான சிவலிங்கங்கள் புதையுண்டு கிடக்கின்றன.

ஆற்றின் நடுவே, ஆலயம் ஒன்று இருந்துள்ளது. தற்போது சிதைவடைந்து கிடக்கிறது. இதனை மீண்டும் யார் கட்டுகிறார்களோ அவர்கள் செய்யும் செயல்கள் அனைத்தும் நான்குமடங்கு புண்ணி யத்தை உண்டாக்கும்.

திருப்பூவணநாதரின் திருவருளைப் பெற்ற பின்னர் திருஞானசம்பந்தர் மதுரை சென்று சமணர்களை வெற்றி கொள்கிறார். மதுரையிலிருந்து வைகை ஆற்றின் தென்கரை வழியே மீண்டும் திருப் பூவணத் திருக்கோயிலுக்கு வந்து 'அடிதொழ நன்மையாகுமே' என்று முடியும் பதிகம் பாடித் திருப்பூவணநாதரை வணங்கி வழிபட்டுள்ளார்.

இதனால் மதுரையில் சைவத்தையும் தமிழையும் தழைக்கச் செய்த பெருமையில் திருப்பூவண நாதருக்குப் பெரும் பங்குண்டு.

திருஞானசம்பந்தர் வழியில் அப்பரும், சுந்தரரும், மாணிக்கவாசகரும், கரூர்த்தேவரும், அருணகிரி

நாதரும் திருப்பூவணம் வந்து இறைவனைப் பாடிப் பணிந்துள்ளனர்.

- ❖ குமரகுருபரரும் வணங்கியுள்ளார். ஆனால் இவரது பாடல்கள் கிடைக்கப்பெறவில்லை.
- ❖ வடநாட்டில் வாழ்ந்த முனிவர்களும், தவசிகளும், பண்டிதர்களும் திருப்பூவணம் வந்து திருப்பூவண நாதரை வணங்கிப் பலன் அடைந்துள்ளனர்.
- ❖ இத்தலத்தின் பெருமைகள் பதினெட்டுப் புராணங் களில் ஒன்றான பிரமகைவர்த்த புராணத்தில் சிறப்பித்துக் கூறப்பெற்றுள்ளன.
- ❖ சுயம்புவாகத் தோன்றிய திருப்பூவணநாதரைத் தேவரும் மனிதரும் வணங்கி வரம் பல பெற்றுள்ளனர்.
- ❖ தாழம்பூவும் பொய்சொன்ன பாவம் நீங்க வழிபட்டுள்ளது.
- ❖ இங்கு "சராசரமே" சிவலிங்க வடிவமாக எழுந்தருளி உள்ளது என விண்ணில் உள்ள கிரகங்கள் வழிபடுகின்றன.
- ❖ இந்திரன் மற்றும் கதிரவன் முதலான பலகடவுளர் பூசைகள் பண்ணி வேண்டிய வரங்கள் அடைந் துள்ளனர்.
- ❖ வழிபாடுகள் இரண்டு வகைப்படும்.
- ❖ ஒன்று "காலம் சென்ற முன்னோர்களை வணங்குவது"
- ❖ மற்றொன்று இயற்கை சக்திகளைத் தெய்வங்களாகக் கருதி வணங்குவது.

நாதரும் திருப்பூவணம் வந்து இறைவனைப் பாடிப் பணிந்துள்ளனர்.

குமரகுருபரரும் வணங்கியுள்ளார். ஆனால் இவரது பாடல்கள் கிடைக்கப்பெறவில்லை.

வடநாட்டில் வாழ்ந்த முனிவர்களும், தவசிகளும், பண்டிதர்களும் திருப்பூவணம் வந்து திருப்பூவண நாதரை வணங்கிப் பலன் அடைந்துள்ளனர்.

இத்தலத்தின் பெருமைகள் பதினெட்டுப் புராணங் களில் ஒன்றான பிரமகைவர்த்த புராணத்தில் சிறப்பித்துக் கூறப்பெற்றுள்ளன.

* சுயம்புவாகத் தோன்றிய திருப்பூவணநாதரைத் தேவரும் மனிதரும் வணங்கி வரம் பல பெற்றுள்ளனர்.

* தாழம்பூவும் பொய்சொன்ன பாவம் நீங்க வழிபட்டுள்ளது.

இங்கு "சராசரமே" சிவலிங்க வடிவமாக எழுந்தருளி உள்ளது என விண்ணில் உள்ள கிரகங்கள் வழிபடுகின்றன.

இந்திரன் மற்றும் கதிரவன் முதலான பலகடவுளர் பூசைகள் பண்ணி வேண்டிய வரங்கள் அடைந் துள்ளனர்.

வழிபாடுகள் இரண்டு வகைப்படும்.

ஒன்று "காலம் சென்ற முன்னோர்களை வணங்குவது"

மற்றொன்று இயற்கை சக்திகளைத் தெய்வங்களாகக் கருதி வணங்குவது.

- ❖ இவ்விரண்டு வழிபாடுகளும் திருப்பூவணத்தில் சிறப்பாக உள்ளன.
- ❖ மனித ஆன்மா இறைவனிடம் செல்ல வேண்டு மானால் பாவங்கள் அறவே நீங்கப் பெற்று, புண்ணியங்கள் மட்டுமே செய்திருக்க வேண்டும். எனவே பாவங்களை நீக்கிப் புண்ணியங்களைச் செய்ய வேண்டும்.
- ❖ உடல் செய்த பாவங்களை நீக்கிப் புண்ணியம் அடைய புனித தீர்த்தங்களில் நீராட வேண்டும்.
- ❖ திருப்பூவணத்திலே, திதி, தர்ப்பணம் போன்ற கர்மகாரியங்களைச் செய்து, எள், தண்ணீர் இவற் றைக் கொடுத்தால் இறந்தவர்கள் நேரில் வந்து அவற்றைப் பெற்றுக் கொண்டு மகிழ்ச்சி அடைவர், நமக்கு நல்லாசிகள் வழங்குவர், இதனால் சிவ பெருமான் அவர்களுக்கு முத்தி கொடுப்பார்.
- ❖ இக்காரணத்தினால், திருப்பூவணம் 'பிதிர் மோட்ச புரி' என அழைக்கப்படுகிறது.
- ❖ திருப்பூவணம் 'காசிக்கு வீசம் கூட' என்னும் அளவிற்குச் சிறப்புடையது.
- ❖ இதனால், 'திருப்பூவணக் காசி' என்று சிறப்புப் பெயர் பெற்றது.
- ❖ சுச்சோதிராசன் திருப்பூவணம் வந்து பிதிர்களுக்குப் பிண்டம் கொடுத்தான். அப்போது அவனது முன்னோர்கள் நேரில் தோன்றி அதனைப் பெற்றுக் கொண்டு ஆசி வழங்கினர்.

இவ்விரண்டு வழிபாடுகளும் திருப்பூவணத்தில் சிறப்பாக உள்ளன.

மனித ஆன்மா இறைவனிடம் செல்ல வேண்டு மானால் பாவங்கள் அறவே நீங்கப் பெற்று, புண்ணியங்கள் மட்டுமே செய்திருக்க வேண்டும். எனவே பாவங்களை நீக்கிப் புண்ணியங்களைச் செய்ய வேண்டும்.

உடல் செய்த பாவங்களை நீக்கிப் புண்ணியம் அடைய புனித தீர்த்தங்களில் நீராட வேண்டும்.

* திருப்பூவணத்திலே, திதி, தர்ப்பணம் போன்ற கர்மகாரியங்களைச் செய்து, எள், தண்ணீர் இவற் றைக் கொடுத்தால் இறந்தவர்கள் நேரில் வந்து அவற்றைப் பெற்றுக் கொண்டு மகிழ்ச்சி அடைவர், நமக்கு நல்லாசிகள் வழங்குவர். இதனால் சிவ பெருமான் அவர்களுக்கு முத்தி கொடுப்பார்.

* இக்காரணத்தினால், திருப்பூவணம் 'பிதிர் மோட்ச புரி' என அழைக்கப்படுகிறது.

* திருப்பூவணம் 'காசிக்கு வீசம் கூட' என்னும் அளவிற்குச் சிறப்புடையது.

இதனால், 'திருப்பூவணக் காசி' என்று சிறப்புப் பெயர் பெற்றது.

சுச்சோதிராசன் திருப்பூவணம் வந்து பிதிர்களுக்குப் பிண்டம் கொடுத்தான். அப்போது அவனது முன்னோர்கள் நேரில் தோன்றி அதனைப் பெற்றுக் கொண்டு ஆசி வழங்கினர்.

- ❖ தில்லையும் (சிதம்பரமும்) திருப்பூவணமும் குரு உபதேசத் தலங்களாகும்.
- ❖ திருப்பூவணத்திலே குருவினை வழிபட்டால் மகிழ்ச்சி உண்டாகும்.
- ❖ வியாச முனிவரிடம் உபதேசம் பெற்ற மாத்தியாந்தின முனிவரும், தியானகாட்ட முனிவரும் திருப் பூவணத்திலே தவம் செய்தனர்.
- ❖ இவர்களுக்குச் சிவபெருமான் தரிசனம் கொடுத்தார்.
- ❖ இம்முனிவர்கள் சிவபெருமானிடம், தங்களுக்குக் குருவாக இருந்து 'குருஉபதேசம்' வழங்கும்படியும், மேலும் சிவனது திருநடனத்தைக் காண வேண்டும் என்றும் வரம் வேண்டினர்.
- ❖ அவர்களது தவத்தை மெச்சிய சிவபெருமான், அவர்களுக்கு 'நமசிவாய' மந்திரத்தை ஓதி அவர்களது இதயத்திலே திருநடனம் செய்தருளினார்.
- ❖ இதனால் திருப்பூவணம், இரகசிய சிதம்பரம் என்று சிறப்புப் பெயர் பெற்றது.
- ❖ திருப்பூவணம் திருக்கோயில், ஈசானிய (வடகிழக்கு) திசையைப் பார்த்துச் சிதம்பரத்தை நோக்கி அமையப் பெற்றுள்ளது.
- ❖ இவ்வமைப்பினால் திருப்பூவணம் கோயில் வாசலில் நின்று கொண்டு, உள்ளே திருப்பூவண நாதரையும், வெளியே சிதம்பரத்தையும் வணங்க முடியும்.

தில்லையும் (சிதம்பரமும்) திருப்பூவணமும் குரு உபதேசத் தலங்களாகும்.

திருப்பூவணத்திலே குருவினை வழிபட்டால் மகிழ்ச்சி உண்டாகும்.

வியாச முனிவரிடம் உபதேசம் பெற்ற மாத்தியாந்தின முனிவரும், தியானகாட்ட முனிவரும் திருப்பூவணத்திலே தவம் செய்தனர்.

இவர்களுக்குச் சிவபெருமான் தரிசனம் கொடுத்தார்.

இம்முனிவர்கள் சிவபெருமானிடம், தங்களுக்குக் குருவாக இருந்து 'குருஉபதேசம்' வழங்கும்படியும், மேலும் சிவனது திருநடனத்தைக் காண வேண்டும் என்றும் வரம் வேண்டினர்.

அவர்களது தவத்தை மெச்சிய சிவபெருமான், அவர்களுக்கு 'நமசிவாய' மந்திரத்தை ஓதி அவர்களது இதயத்திலே திருநடனம் செய்தருளினார்.

இதனால் திருப்பூவணம், இரகசிய சிதம்பரம் என்று சிறப்புப் பெயர் பெற்றது.

* திருப்பூவணம் திருக்கோயில், ஈசானிய (வடகிழக்கு) திசையைப் பார்த்துச் சிதம்பரத்தை நோக்கி அமையப் பெற்றுள்ளது.

இவ்வமைப்பினால் திருப்பூவணம் கோயில் வாசலில் நின்று கொண்டு, உள்ளே திருப்பூவண நாதரையும், வெளியே சிதம்பரத்தையும் வணங்க முடியும்.

- ❖ தில்லையை நோக்கித் திருப்பூவணக் கோயில் அமைந்துள்ளதால், தில்லையும் திருப்பூவணமும் தொடர்பு உடையவனவாக உள்ளன.
- ❖ கருவறை விமானத்தில் ஐந்து கலசங்கள் உள்ளன.
- ❖ நான்கு கலசங்கள் உருண்டை வடிவில் திசைக்கு ஒன்றாக உள்ளன.
- ❖ நடுவில் உள்ள கலசம் சதுரவடிவில் உள்ளது.
- ❖ ஐந்து கலசங்களும் சிவபெருமானின் ஐந்து முகங்களைக் குறிப்பதாக உள்ளன.
- ❖ இவ்வாறான விமானம் அரிதானது.

பிற தாண்டவம்

- ❖ திருப்பூவணத்தில் சிவபெருமான் ருத்தர மேனியனாய் (ருத்ர விடங்கர்) 'பிரமதாண்டவம்' என்னும் நடனமாடியுள்ளார்.
- ❖ பௌர்ணமி நாளில், அன்புடன் பிரமதாண்டவர் மாபூசை செய்வோர் மகேசர் உலோகத்தில் ஒரு பிரமகற்பம் வாழ்ந்து காந்தத்தில் உருத்திரனோடு வாழ்ந்து பின்னர் குருமணி நல்விமானத்தில் ஏறி சிவலோகம் அடைந்து அங்கே குடியாய் வாழ்வார்.
- ❖ நடராசரின் வடிவத்தைப் பொதுவாகக் கல்லில் வடிப்பதில்லை. மிகவும் பழமையான திருக்கோயில் களில் மட்டும் கல்லினால்ஆன நடராசரைக் காணலாம்.
- ❖ மதுரையில் கருவறைக்கு அருகில் கல்லினால் ஆன நடராசர் சிலா வடிவம் உள்ளது.

தில்லையை நோக்கித் திருப்பூவணக் கோயில் அமைந்துள்ளதால், தில்லையும் திருப்பூவணமும் தொடர்பு உடையனவாக உள்ளன.

கருவறை விமானத்தில் ஐந்து கலசங்கள் உள்ளன.

நான்கு கலசங்கள் உருண்டை வடிவில் திசைக்கு ஒன்றாக உள்ளன. நடுவில் உள்ள கலசம் சதுரவடிவில் உள்ளது.

ஐந்து கலசங்களும் சிவபெருமானின் ஐந்து முகங்களைக் குறிப்பதாக உள்ளன. இவ்வாறான விமானம் அரிதானது.

பிரம தாண்டவம்

திருப்பூவணத்தில் சிவபெருமான் ருத்தர மேனியனாய் (ருத்ர விடங்கர்) 'பிரமதாண்டவம்' என்னும் நடனமாடியுள்ளார்.

பௌர்ணமி நாளில், அன்புடன் பிரமதாண்டவர் மாபூசை செய்வோர் மகேசர் உலகத்தில் ஒரு பிரமகற்பம் வாழ்ந்து காந்தத்தில் உருத்திரனோடு வாழ்ந்து பின்னர் குருமணி நல்விமானத்தில் ஏறி சிவலோகம் அடைந்து அங்கே குடியாய் வாழ்வார்.

நடராசரின் வடிவத்தைப் பொதுவாகக் கல்லில் வடிப்பதில்லை. மிகவும் பழமையான திருக்கோயில்களில் மட்டும் கல்லினால் ஆன நடராசரைக் காணலாம்.

மதுரையில் கருவறைக்கு அருகில் கல்லினால் ஆன நடராசர் சிலை வடிவம் உள்ளது.

- ❖ மதுரை நடராசரும், திருப்பூவணம் நடராசரும் ஒரே காலத்தில் செய்யப்பெற்றவை.
- ❖ கல்லினால் ஆன சிலா உருவத்துடன் ஐம்பொன்னால் ஆன நடராசர் திருமேனி ஒன்றும் உள்ளது.
- ❖ இந்த ஐம்பொன் சிலை கி.பி. 14–ம் நூற்றாண்டைச் சார்ந்தது.

சதுர்வேதபுரம்

- ❖ நான்கு வேதங்களும் ஓதப்பெறும் தலங்கள், 'சதுர்வேதபுரம்' எனப் பெயர் பெற்றன.
- ❖ பிறதலங்களில் வேதங்கள் அந்தணர்களால் ஓதப் பெறும். ஆனால், திருப்பூவணத்திலோ, வேத வியாசன், வசிட்டன், வாமதேவன், மார்க்கண்டன், தீதரன், சதானந்தன், பராத்துவாசன், அக்கினிபன், சவுனகன், பாற்கரன் முதலான முனிவர்களும் அவர்களது சீடர்களும் வேதங்களை ஓதுகின்றனர்.

திருப்பூவணப் புராணத்தைப் படிப்பதாலும் கேட்பதாலும் உண்டாகும் பலன்கள்

- ❖ சூரியன் பூசனைச் சருக்கத்தைப் படிப்போரும் கேட்போரும் புந்தியில் கொள்வோரும், அவர்கள் திருப்பூவணம் வந்து வழிபட்டு முத்தியடையும் பேறு கிடைக்கப்பெறுவர்.
- ❖ திருப்பூவணநாதரைச் சூரியன் வழிபட்ட முறைப்படிப் பூசை செய்வோர் அரசராவர்.
- ❖ திரணாசனன் முத்தி பெற்ற சருக்கத்தை இசையுடன் பாடுவோரும், இக்கதையைக் கூறுவோரும், பொருள்

12

மதுரை நடராசரும், திருப்பூவணம் நடராசரும் ஒரே காலத்தில் செய்யப்பெற்றவை. கல்லினால் ஆன சிலா உருவத்துடன் ஐம்பொன்னால் ஆன நடராசர் திருமேனி ஒன்றும் உள்ளது. இந்த ஐம்பொன் சிலை கி.பி. 14-ம் நூற்றாண்டைச் சார்ந்தது.

சதுர்வேதபுரம்

* நான்கு வேதங்களும் ஓதப்பெறும் தலங்கள். 'சதுர்வேதபுரம்' எனப் பெயர் பெற்றன.

பிறதலங்களில் வேதங்கள் அந்தணர்களால் ஓதப்பெறும். ஆனால், திருப்பூவணத்திலோ, வேத வியாசன், வசிட்டன், வாமதேவன், மார்க்கண்டன், தீதரன், சதானந்தன், பராத்துவாசன், அக்கினிபன், சவுனகன், பாற்கரன் முதலான முனிவர்களும் அவர்களது சீடர்களும் வேதங்களை ஓதுகின்றனர்.

திருப்பூவணப் புராணத்தைப் படிப்பதாலும் கேட்பதாலும் உண்டாகும் பலன்கள்

சூரியன் பூசனைச் சருக்கத்தைப் படிப்போரும், கேட்போரும், புந்தியில் கொள்வோரும், அவர்கள் திருப்பூவணம் வந்து வழிபட்டு முத்தியடையும் பேறு கிடைக்கப்பெறுவர். திருப்பூவணநாதரைச் சூரியன் வழிபட்ட முறைப்படிப் பூசை செய்வோர் அரசராவர்.

திரணாசனன் முத்தி பெற்ற சருக்கத்தை இசையுடன் பாடுவோரும், இக்கதையைக் கூறுவோரும், பொருள்

உணர்ந்தோரும் மற்றும் இக்கதையைச் செவி மடுத்துக் கேட்டோரும் சிவபெரும்பதி சேர்வர்.

❖ மணிகன்னிகைச் சருக்கக் கதையைக் கூறுவோர் அர்த்தநாரியான சிவபெருமானின் பதியில் தங்குவார்கள்.

❖ துன்மனன் சருக்கத்தைப் படிப்போரும் அதனை ஒதுவோரும், கேட்போரும், பூசை செய்வோரும், ஊர்வசியைப் போன்ற அழகுடைய பெண்டிருடன் பதினாயிரம் வருடம் வாழ்வர்.

❖ தருமஞ்ஞன் முத்தி பெற்ற சருக்கத்தைப் படிப்போரும், கேட்போரும் சிவபெருமானிடம் வந்து அவரது அருகில் இருப்பர்.

❖ உற்பலாங்கி பதியை அடைந்த சருக்கத்தில், மணிகன்னிகைத் தீர்த்தமாடுவோரின் பாவங்கள் நீங்கப்பெறும். சுமங்கலிகள் நீராடினால் மக்கட்பேறு பெறுவர்.

❖ அமங்கலிகள் நீராடினால் அடுத்தபிறவியில் சுமங்கலி யாய் வாழ்வர், விரத நற்பலன்கள் உண்டாகும். உற்பலாங்கி பதியை அடைந்த சருக்கத்தைப் படிப்போரும், கேட்போரும் அடையும் பலன்கள் கலியின் கொடுமை நீங்கப்பெற்று, வளமை பெற்று நற்கதி பெறுவர்.

❖ பாற்கரபுரச் சருக்கத்தைப் பண்ணொடு பாடுவோர் செவிகொண்டு கேட்டு உள்ளத்தில் கொள்வோர் செல்வம் மிகுந்த நாட்டை அரசாள்வர்.

உணர்ந்தோரும் மற்றும் இக்கதையைச் செவி மடுத்துக் கேட்டோரும் சிவபதி சேர்வர்.

மணிகன்னிகைச் சருக்கக் கதையைக் கூறுவோர் அர்த்தநாரியான சிவபெருமானின் பதியில் தங்குவார்கள்.

துன்மனன் சருக்கத்தைப் படிப்போரும் அதனை ஓதுவோரும், கேட்போரும், பூசை செய்வோரும், ஊர்வசியைப் போன்ற அழகுடைய பெண்டீருடன் பதினாயிரம் வருடம் வாழ்வர்.

தருமஞ்ஞன் முத்தி பெற்ற சருக்கத்தைப் படிப்போரும், கேட்போரும் சிவபெருமானிடம் வந்து அவரது அருகில் இருப்பர்.

உற்பலாங்கி பதியை(கணவனை) அடைந்த சருக்கத்தில், மணிகன்னிகைத் தீர்த்தமாடுவோரின் பாவங்கள் நீங்கப்பெறும். சுமங்கலிகள் நீராடினால் மக்கட்பேறு பெறுவர்.

அமங்கலிகள் நீராடினால் அடுத்தபிறவியில் சுமங்கலியாய் வாழ்வர், விரத நற்பலன்கள் உண்டாகும். உற்பலாங்கி பதியை அடைந்த சருக்கத்தைப் படிப்போரும், கேட்போரும் அடையும் பலன்கள் கலியின் கொடுமை நீங்கப்பெற்று, வளமை பெற்று நற்கதி பெறுவர்.

பாற்கரபுரச் சருக்கத்தைப் பண்ணொடு பாடுவோர் செவிகொண்டு கேட்டு உள்ளத்தில் கொள்வோர் செல்வம் மிகுந்த நாட்டை அரசாள்வர்.

- ❖ சர்வபாவ மோசனச் சருக்கத்தை படிப்போரும் அதைக் கேட்போரும் பிறரிடம் கூறுவோரும் மனைவி, மக்கள், பேரன், பேத்திகள் சுற்றத்துடன் மங்கலமாக வாழ்ந்து சிவபிரானின் பொற்பாதங்களை அடைவர்.
- ❖ பிரமசாப மோசன சருக்கத்தைத் தினமும் படிப்போர், அதன் பொருளை உணர்ந்தோர், அதனைப் பிறரிடம் கூறுவோர், அதைக் கேட்போர் அனைவரும் தங்களது வாழ்நாளில் நீண்ட சுவர்க்கத்தில் உள்ள மகளிர் சூழ இருப்பர்.
- ❖ இலக்குமி சாபமோசனச் சருக்கத்தைப் படிப்போரும், கேட்போரும் இலக்குமியின் அருளாலே செல்வம் பெற்று மங்கலமாக வாழ்வர். மேலும் இப்பலனைத் திருநந்தி தேவரே நேரில் வந்து எடுத்துரைத்ததாலும் அரிதாகும். அவ்வளவு அதிகமான பலன்கள் கிட்டும்.
- ❖ உமாதேவி திருவவதாரச் சருக்கத்தைப் படிப்போரும், கேட்போரும் சிவபிரான் திருவருளினாலே முத்தி யடைவார்கள்.
- ❖ திருக்கலியாணச்சருக்கத்தைப் படிப்போரும், கேட்போரும் கடுந்துயரங்கள் நீங்கப் பெற்று மங்களம் உண்டாகப் பெறுவர். சுப நிகழ்ச்சிகள் நடைபெறும்.
- ❖ மேலும், இந்திரபோகங்கள் நிறைந்த செஞ்சடிலன் பதத்தில் சேர்குவார்கள்.
- ❖ தக்கன் வேள்வியழித்த சருக்கத்தை ஓதுவோரும் அதைக் கேட்போரும், எட்டுத்திசைகளும் புகழ

*சர்வபாவ மோசனச் சருக்கத்தை படிப்போரும் அதைக் கேட்போரும் பிறரிடம் கூறுவோரும் மனைவி, மக்கள், பேரன், பேத்திகள் சுற்றத்துடன் மங்கலமாக வாழ்ந்து சிவபிரானின் பொற்பாதங்களை அடைவர்.

பிரமசாப மோசன சருக்கத்தைத் தினமும் படிப்போர், அதன் பொருளை உணர்ந்தோர், அதனைப் பிறரிடம் கூறுவோர், அதைக் கேட்போர் அனைவரும் தங்களது வாழ்நாளில் நீண்ட சுவர்க்கத்தில் உள்ள மகளிர் சூழ இருப்பர்.

இலக்குமி சாபமோசனச் சருக்கத்தைப் படிப்போரும், கேட்போரும் இலக்குமியின் அருளாலே செல்வம் பெற்று மங்கலமாக வாழ்வர். மேலும் இப்பலனைத் திருநந்தி தேவரே நேரில் வந்து எடுத்துரைத்ததாலும் அரிதாகும். அவ்வளவு அதிகமான பலன்கள் கிட்டும்.

உமாதேவி திருவவதாரச் சருக்கத்தைப் படிப்போரும். கேட்போரும் சிவபிரான் திருவருளினாலே முத்தி யடைவார்கள்.

திருக்கலியாணச்சருக்கத்தைப் படிப்போரும், கேட்போரும் கடுந்துயரங்கள் நீங்கப் பெற்று மங்களம் உண்டாகப் பெறுவர். சுப நிகழ்ச்சிகள் நடைபெறும்.

மேலும், இந்திரபோகங்கள் நிறைந்த செஞ்சடிலன் பதத்தில் சேர்வார்கள்.

தக்கன் வேள்வியழித்த சருக்கத்தை ஓதுவோரும் அதைக் கேட்போரும், எட்டுத்திசைகளும் புகழ

அரசராய் வாழ்வர். சித்தம் மிகும். சுவர்க்க இன்பத்தை நீண்ட காலம் அனுபவிப்பர்.

❖ உமைவரு சருக்கத்தை ஓதுவோரும் அதைக் கேட்போரும், சிவபெருமானது தாமரைமலர்ப் பாத நிழலில் வாழ்வார்கள்.

❖ சுச்சோதி தீர்த்த யாத்திரைச் சருக்கத்தைப் படிப்பவர்கள். நல்ல புதல்வர்களைப் பெற்று மேன்மையடைவர். பத்தி மிகுந்திருப்பர், தேகம் சுத்தமாய் வாழ்ந்து சிவகதி சேர்வார்கள்.

❖ சுச்சோதி பிதிர்களை முத்தியடைவித்த சருக்கத்தைப் படிப்போரும், கேட்போரும் சிவபிரானது மோன ஞான நன்துதி பொருந்துவர்.

❖ தீர்த்தச் சருக்கத்தைப் படிப்போரும், கேட்போரும் பார்புரந்தருள்பார்த்திவராகியே பரவரும் பரமுத்தி பொருந்துவார்''.

❖ நளன்கலிமோசனச் சருக்கத்தை இசையுடன் பாடி எண்ணத்தில் மகிழ்ச்சி அடைவோரின் துன்பங்கள் நீங்கும். கலிகாலத்தின் கொடுமைகள் குறையும்.

❖ திருவிழாச் சருக்கத்தைப் படிப்போரும் அதை அன்புடன் கேட்போரும் தங்களது துயரமான எண்ணங்கள் நீங்கப் பெற்று பொன்னம்பலத்தைச் சென்று சேர்வர்.

❖ சிதம்பரவுபதேசச் சருக்கத்தைப் படிப்போரும், கேட்போரும் திருப்பூவணநாதருக்கு நல்ல பூசைகள்

அரசராய் வாழ்வர். சித்தம் மிகும். சுவர்க்க இன்பத்தை நீண்ட காலம் அனுபவிப்பர்.

உமைவரு சருக்கத்தை ஓதுவோரும் அதைக் கேட்போரும், சிவபெருமானது தாமரைமலர்ப் பாத நிழலில் வாழ்வார்கள்.

சுச்சோதி தீர்த்த யாத்திரைச் சருக்கத்தைப் படிப்பவர்கள். நல்ல புதல்வர்களைப் பெற்று மேன்மையடைவர். பத்தி மிகுந்திருப்பர், தேகம் சுத்தமாய் வாழ்ந்து சிவகதி சேர்வார்கள். சுச்சோதி பிதிர்களை முத்தியடைவித்த சருக்கத்தைப் படிப்போரும், கேட்போரும் சிவபிரானது மோன ஞான நன்துதி பொருந்துவர்.

தீர்த்தச் சருக்கத்தைப் படிப்போரும், கேட்போரும் பார்புரந்தருள்பார்த்திவராகியே பரவரும் பரமுத்தி பொருந்துவார்".

நளன்கலிமோசனச் சருக்கத்தை இசையுடன் பாடி எண்ணத்தில் மகிழ்ச்சி அடைவோரின் துன்பங்கள் நீங்கும். கலிகாலத்தின் கொடுமைகள் குறையும்.

திருவிழாச் சருக்கத்தைப் படிப்போரும் அதை அன்புடன் கேட்போரும் தங்களது துயரமான எண்ணங்கள் நீங்கப் பெற்று பொன்னம்பலத்தைச் சென்று சேர்வர்.

சிதம்பரவுபதேசச் சருக்கத்தைப் படிப்போரும், கேட்போரும் திருப்பூவணநாதருக்கு நல்ல பூசைகள்

செய்தால் கிடைக்கும் பலன்கள் அனைத்தும் கிடைக்கும். நாடிய பொருள்கள்யாவும் கிடைக்கப் பெறுவர்.

❖ 'புவனம் எங்கும் சீர்போற்றும் பூவணப் புராணத்தைக் கூறிடுவோரும், கேட்போரும் சிவபிரான் அருளினாலே, அவர்கள் விரும்பும் பேர் உவகை கூடும். இது சத்தியஞ் சத்தியம்" (திருப்பூவணப் புராணப் பாடல் 1435).

பாவம் போக்கும் பூவணம்

❖ பாவங்கள் இரண்டு வகை. ஒன்று அறிந்து செய்யும் பாவமாகும். மற்றொன்று அறியாமல் செய்யும் பாவமாகும்.

❖ அறியாமல் செய்த பாவங்கள் பிரயாச்சித்தம் செய்தால் நீங்கிவிடும். அறிந்து செய்த பாவத்திற்குத் தண்டனை உண்டு.

❖ ஒவ்வொரு தலமும் ஒவ்வொருவிதமான பாவங் களைப் போக்கவல்லனவாக இருக்கும்.

❖ திருப்பூவணம் அறிந்து செய்த பாவங்களைப் போக்கும் சிறப்புப் பெற்றது.

❖ பார்வதி தேவியார் தக்கன் பொருட்டுக் கணவருடன் தர்க்கம் செய்து வாதிட்டார். இது அறிந்து செய்த பாவமாகும்.

❖ இப்பாவம் நீங்கத் திருப்பூவணம் வந்து தவமிருந்து வழிபட்டுப் பாவம் நீங்கப் பெற்றார்.

செய்தால் கிடைக்கும் பலன்கள் அனைத்தும் கிடைக்கும். நாடிய பொருள்கள்யாவும் கிடைக்கப் பெறுவர்.

'புவனம் எங்கும் சீர்போற்றும் பூவணப் புராணத்தைக் கூறிடுவோரும், கேட்போரும் சிவபிரான் அருளினாலே, அவர்கள் விரும்பும் பேர் உவகை கூடும். இது சத்தியஞ் சத்தியம்" (திருப்பூவணப் புராணப் பாடல் 1435).

பாவம் போக்கும் பூவணம்

பாவங்கள் இரண்டு வகை. ஒன்று அறிந்து செய்யும் பாவமாகும். மற்றொன்று அறியாமல் செய்யும் பாவமாகும்.

அறியாமல் செய்த பாவங்கள் பிரயாச்சித்தம் செய்தால் நீங்கிவிடும். அறிந்து செய்த பாவத்திற்குத் தண்டனை உண்டு.

ஒவ்வொரு தலமும் ஒவ்வொருவிதமான பாவங் களைப் போக்கவல்லனவாக இருக்கும்.

திருப்பூவணம் அறிந்து செய்த பாவங்களைப் போக்கும் சிறப்புப் பெற்றது.

பார்வதி தேவியார் தக்கன் பொருட்டுக் கணவருடன் தர்க்கம் செய்து வாதிட்டார். இது அறிந்து செய்த பாவமாகும்.

இப்பாவம் நீங்கத் திருப்பூவணம் வந்து தவமிருந்து வழிபட்டுப் பாவம் நீங்கப் பெற்றார்.

*

- ❖ பிரமதேவன் காமஉணர்வு மிகப்பெற்று ஊர்வசியின் மர்மஸ்தானத்தை உற்று நோக்கினான், இதனால் அவனைப் பாவம் பிடித்துக் கொண்டது.
- ❖ இப்பாவம் நீங்கத் திருப்பூவணம் வந்து திருப்பூவண நாதரை வழிபட்டுப் பாவம் நீங்கப் பெற்றான்.
- ❖ வாலகில்லி முனிவர் மிகவும் குள்ளமாய் இருந்தார். அவரை முனிவர் என்று தெரிந்தும் இலக்குமி தேவியார் (மகாலெட்சுமி) கேலி செய்து நகைத்தார்.
- ❖ இதனால் பாவம் உண்டானது. இப்பாவத்தைப் போக்க மகாலெட்சுமி திருப்பூவணம் வந்து தவமிருந்தாள். பாவம் நீங்கப் பெற்றாள்.
- ❖ துன்மனன் என்பவன் அறிந்து செய்த பாவங்கள் அனைத்தையும் நீக்கிய திருத்தலம்.
- ❖ பொய் சொல்வது பாவம், இருந்தும் சிவபெருமானிடம் தாழம்பூ பொய் சொன்னது.
- ❖ இப்பாவம் நீங்கத் திருப்பூவணம் வந்து வழிபட்டுப் பாவம் நீங்கப் பெற்றது.
- ❖ தீரணாசனன் என்பவன் முத்தி அடைந்துள்ளான்.
- ❖ தருமஞ்ஞனின் முன்னோர்கள் முத்தி அடைந்துள்ளனர்.
- ❖ சுச்சோதி அரசனின் முன்னோர்கள் நேரில் வந்து பிண்டம் பெற்று முத்தி அடைந்துள்ளனர்.
- ❖ துன்மனன் நற்கதி அடைந்துள்ளான்.

பிரமதேவன் காமஉணர்வு மிகப்பெற்று ஊர்வசியின் மர்மஸ்தானத்தை உற்று நோக்கினான், இதனால் அவனைப் பாவம் பிடித்துக் கொண்டது.

இப்பாவம் நீங்கத் திருப்பூவணம் வந்து திருப்பூவண நாதரை வழிபட்டுப் பாவம் நீங்கப் பெற்றான்.

வாலகில்லி முனிவர் மிகவும் குள்ளமாய் இருந்தார். அவரை முனிவர் என்று தெரிந்தும் இலக்குமி தேவியார் (மகாலெட்சுமி) கேலி செய்து நகைத்தார்.

இதனால் பாவம் உண்டானது. இப்பாவத்தைப் போக்க மகாலெட்சுமி திருப்பூவணம் வந்து தவமிருந்தாள். பாவம் நீங்கப் பெற்றாள்.

துன்மனன் என்பவன் அறிந்து செய்த பாவங்கள் அனைத்தையும் நீக்கிய திருத்தலம்.

பொய் சொல்வது பாவம் இருந்தும் சிவபெருமா னிடம் தாழம்பூ பொய் சொன்னது.

இப்பாவம் நீங்கத் திருப்பூவணம் வந்து வழிபட்டுப் பாவம் நீங்கப் பெற்றது.

தீரணாசனன் என்பவன் முத்தி அடைந்துள்ளான்.

தருமஞ்ஞனின் முன்னோர்கள் முத்தி அடைந் துள்ளனர்.

சுச்சோதி அரசனின் முன்னோர்கள் நேரில் வந்து பிண்டம் பெற்று முத்தி அடைந்துள்ளனர்.

துன்மனன் நற்கதி அடைந்துள்ளான்.

❖ இக்காரணங்களால், திருப்பூவணம் அறிந்து செய்த பாவம் போக்கவல்ல திருத்தலமாகவும், 'பிதிர் முத்திபுரமாகவும் சிறப்புற்றுத் திகழ்கிறது.

திருப்பூவணத் திருத்தலம் அமைவிடம்

❖ பாண்டியநாட்டின் தலைநகரமாகிய மதுரைக்குத் தென்கிழக்குத் திசையிலே (அக்னித் திசை) மதுரை – இராமேசுவரம் தேசிய நெடுஞ்சாலையில் 18 கி.மீ தூரத்திலே திருப்பூவணம் உள்ளது.

❖ மணிகன்னிகையில் அமிழ்தம் கலந்துள்ளது. அதனை உண்டால் நோய்கள் நீங்கப் பெற்று நீண்ட ஆயுள் உண்டாகும்.

❖ மணிகன்னிகைத் தீர்த்தத்தில் நீராடினால் அனைத்து தீவினைகளும் நீங்கப் பெறும்.

❖ அத்தீர்த்தத்திலே அஸ்திக் கலயத்தில் உள்ள எலும்பு பூவாக மாறியது.

❖ அதில் பெண்கள் நீராடி மின்னம்மையை வழிபட்டால் திருமணம் நடைபெறும். நல்ல கணவன் அமையப் பெறுவர். தீர்க்க சுமங்கலியாய் சுகம் அனுபவிப்பர். நன்மக்களைப் பெற்று வளமுடன் வாழ்வர்.

❖ பெண்களைக் காமக்கண்ணோடு பார்த்தல் முதலான பாவங்கள் நீங்கப்பெறும்.

❖ பிறரை அவமதித்துக் கேலி செய்த பாவம் நீங்கப் பெறும். மற்றும் அனைத்துப் பாவங்களும் நீங்கப் பெறும்.

இக்காரணங்களால், திருப்பூவணம் அறிந்து செய்த பாவம் போக்கவல்ல திருத்தலமாகவும், 'பிதிர் முத்திபுரமாகவும் சிறப்புற்றுத் திகழ்கிறது.

திருப்பூவணத் திருத்தலம் அமைவிடம்

* பாண்டியநாட்டின் தலைநகரமாகிய மதுரைக்குத் தென்கிழக்குத் திசையிலே (அக்னித் திசை) மதுரை - இராமேசுவரம் தேசிய நெடுஞ்சாலையில் 18 கி.மீ தூரத்திலே திருப்பூவணம் உள்ளது.

மணிகன்னிகையில் அமிழ்தம் கலந்துள்ளது. அதனை உண்டால் நோய்கள் நீங்கப் பெற்று நீண்ட ஆயுள் உண்டாகும்.

மணிகன்னிகைத் தீர்த்தத்தில் நீராடினால் அனைத்து தீவினைகளும் நீங்கப் பெறும்.

அத்தீர்த்தத்திலே அஸ்திக் கலயத்தில் உள்ள எலும்பு பூவாக மாறியது.

அதில் பெண்கள் நீராடி மின்னம்மையை வழிபட்டால் திருமணம் நடைபெறும். நல்ல கணவன் அமையப் பெறுவர். தீர்க்க சுமங்கலியாய் சுகம் அனுபவிப்பர். நன்மக்களைப் பெற்று வளமுடன் வாழ்வர்.

பெண்களைக் காமக்கண்ணோடு பார்த்தல் முதலான பாவங்கள் நீங்கப்பெறும்.

பிறரை அவமதித்துக் கேலி செய்த பாவம் நீங்கப் பெறும். மற்றும் அனைத்துப் பாவங்களும் நீங்கப் பெறும்.

❖ திருப்பூவணநாதரை வழிபட்டால் குருவருள் கிடைக்கும்.

❖ தமிழகத்தின் மூவேந்தர்களும், சுச்சோதி, நளன் முதலான வடநாட்டு வேந்தர்களும் காலங் காலமாகத் திருப்பூவணம் வந்து வழிபட்டுள்ளனர்.

புராண அடிப்படையிலான வழிபாடுகள்

❖ அம்மன் தவம் இயற்றிய திருத்தலம். எனவே 'ஆடித்தபசு விழா' சிறப்பாக நடைபெற்று வருகிறது.

❖ நளமகாராசன் அசுவமேத யாகத்தைத் திருப் பூவணத்திற் செய்தான்.

❖ திருப்பூவணத்திலே யாகங்கள் செய்தால் அதிகமான பலன்கள் கிடைக்கும்.

விழாக்கள்

❖ பங்குனி உத்தரத்திலே திருவிழாக்கள் நடை பெற்றுள்ளன. 10ஆவது நாளன்று தேர்திருவிழா நடைபெறும். அன்று அழகிய பிரான் (உற்சவரை) தேரில் இருக்கும் போது வழிபட்டால் பாவங்கள் அனைத்தும் தீரும், புண்ணியம் உண்டாகும்.

❖ திருவிளக்கு பூசைகள் மற்றும் பல விழாக்கள் இன்றளவும் பண்டைச் சிறப்பு மாறாமல் நடைபெற்று வருகின்றன.

❖ நளமகாராசன் திருப்பூவணத்தில் தீர்த்தவாரி விழா நடத்தியுள்ளான்.

திருப்பூவணநாதரை வழிபட்டால் குருவருள் கிடைக்கும்.

தமிழகத்தின் மூவேந்தர்களும், சுச்சோதி, நளன் முதலான வடநாட்டு வேந்தர்களும் காலங் காலமாகத் திருப்பூவணம் வந்து வழிபட்டுள்ளனர்.

புராண அடிப்படையிலான வழிபாடுகள்

அம்மன் தவம் இயற்றிய திருத்தலம். எனவே 'ஆடித்தபசு விழா' சிறப்பாக நடைபெற்று வருகிறது.

நளமகாராசன் அசுவமேத யாகத்தைத் திருப் பூவணத்திற் செய்தான்.

திருப்பூவணத்திலே யாகங்கள் செய்தால் அதிகமான பலன்கள் கிடைக்கும்.

விழாக்கள்

பங்குனி உத்தரத்திலே திருவிழாக்கள் நடை பெற்றுள்ளன. 10ஆவது நாளன்று தேர்திருவிழா நடைபெறும். அன்று அழகிய பிரான் (உற்சவரை) தேரில் இருக்கும் போது வழிபட்டால் பாவங்கள் அனைத்தும் தீரும், புண்ணியம் உண்டாகும்.

* திருவிளக்கு பூசைகள் மற்றும் பல விழாக்கள் இன்றளவும் பண்டைச் சிறப்பு மாறாமல் நடைபெற்று வருகின்றன.

நளமகாராசன் திருப்பூவணத்தில் தீர்த்தவாரி விழா நடத்தியுள்ளான்.

சிவலிங்கம் முளைத்த வரலாறு

❖ அறிந்து செய்த பாவம் போக்க உமையம்மை திருப்பூவணம் வந்து பாரிசாதமரம் வளர்த்துத் தவம் செய்தார்.

❖ அந்தப் பாரிசாதமரத்தின் அடியிலே பூவண்ண மாகிய சிவலிங்கம் ஒன்று தோன்றியது.

❖ அதனை உமையம்மை வணங்க, அதில் சிவ பெருமான் தோன்றி பார்வதிதேவியாரின் பாவத்தை நீக்கி வரம் அருளினார்.

❖ சிவபெருமான், பூவாய்த் தோன்றியதால் பூவணநாதர் எனப் பெயர் பெற்றார்.

❖ இறைவி, மின்னல் போன்று வடிவும், சக்தியும் உடையவளாய் இருப்பதால் அழகிய மின்னம்மை என்றும் பெயர் பெற்றார்.

❖ திருப்பூவணநாதர் தோன்றிய இடம் திருப்பூவணம் என்றானது.

❖ இத்தலத்திற்கு வந்து சேர்தலே மிகவும் புண்ணியமாகும்.

தலத்தின் பெயர்

❖ இக்காலத்தில் இவ்வூர் 'திருப்புவனம்' (Tiruppuvanam) என்று அழைக்கப்படுகிறது. தமிழ் திருமுறைகளில் இவ்வூர் 'திருப்பூவணம்' என்றே குறிப்பிடப் பெற்றுள்ளது.

❖ திருப்பூவணப் புராணத்திலும், திருப்பூவண நாதருலாவிலும், 'புட்பவணம்' என்றும் 'பூவணம்' என்றும் அழைக்கப்பட்டுள்ளது.

சிவலிங்கம் முளைத்த வரலாறு

அறிந்து செய்த பாவம் போக்க உமையம்மை திருப்பூவணம் வந்து பாரிசாதமரம் வளர்த்துத் தவம் செய்தார்.

அந்தப் பாரிசாதமரத்தின் அடியிலே பூவண்ண மாகிய சிவலிங்கம் ஒன்று தோன்றியது.

அதனை உமையம்மை வணங்க, அதில் சிவ பெருமான் தோன்றி பார்வதிதேவியாரின் பாவத்தை நீக்கி வரம் அருளினார்.

சிவபெருமான். பூவாய்த் தோன்றியதால் பூவணநாதர் எனப் பெயர் பெற்றார்.

இறைவி, மின்னல் போன்று வடிவும், சக்தியும் உடையவளாய் இருப்பதால் அழகிய மின்னம்மை என்றும் பெயர் பெற்றார்.

திருப்பூவணநாதர் தோன்றிய இடம் திருப்பூவணம் என்றானது.

இத்தலத்திற்கு வந்து சேர்தலே மிகவும் புண்ணியமாகும்.

தலத்தின் பெயர்

இக்காலத்தில் இவ்வூர் 'திருப்புவனம்' (Tiruppuvanam) என்று அழைக்கப்படுகிறது. தமிழ் திருமுறைகளில் இவ்வூர் 'திருப்பூவணம்' என்றே குறிப்பிடப் பெற்றுள்ளது.


திருப்பூவணப் புராணத்திலும், திருப்பூவண நாதருலாவிலும், 'புட்பவணம்' என்றும் 'பூவணம்' என்றும் அழைக்கப்பட்டுள்ளது.




பாவநாச தீர்த்தக்கரை (வைகை ஆறு) யில் உள்ள


திருநந்திதேவர்

காசிஶ்ரீ கி. காளைராசன்


பிரமதாண்டவ நடேசுவரர்
மாத்தியாந்தினர் மற்றும் தியானகாட்ட முனிவர்களுக்காகத்
திருப்பூவணத்தில் திருநடனம் செய்தருளுதல்



காசிஸ்ரீ கி. காளைராசன்


திதி, தர்பணம், சிராத்தம் போன்றவை செய்வதற்கு
முன்பு வணங்க வேண்டிய
பைரவர்

- ‘திருப்புவனம்’ என்ற சொல் வெள்ளையர்கள் ஆட்சிக் காலத்தில் உண்டானது.
- ‘திருப்புவனம்’ என்று அழைப்பது தவறாகும்.
- திருப்பூவணத்தில் சிவலிங்கம் ‘பூவால் ஆனது’. பூவால் ஆனதால் ‘பூவணன்’ எனக் காரணப் பெயர் உண்டானது. பூவணன் தோன்றிய இடம் ‘பூவணம்’ என்று அழைக்கப்பட்டது.
- திரு(மகாலெட்சுமி) வந்து வணங்கிய தலம் என்பதால் ‘திரு’ என்று அடைமொழி சேர்ந்து, ‘திருப்பூவணம்’ என்றழைக்கப்படுகிறது. பூவணம் என்ற சொல்லை வடநூலோர் ‘பூவனம்’ எனப் பொருள் கொண்டு புராணங்களில் ‘புஷ்பவனம்’ என வடமொழியில் குறிப்பிட்டிருக்கின்றனர்.
- திருப்பூவணத்திற்கு முத்தியாச்சிரமம், சிதம்பரம், ரகசிய சிதம்பரம், தட்சிண காசி, சதுர்வேதபுரம், பிதிர் முத்திபுரம், பிதிர் மோட்சபுரி, பாஸ்கரபுரம், பிரமபுரம், இலக்குமிபுரம் என்றும் பெயர்கள் உண்டு.

சீவசமாதிகள்

- திருப்பூவணத்தில் பதினெட்டுச் சித்தர்களில் ஒருவரான ‘கோரக்கரின்’ சீவசமாதி உள்ளது.
- இது கோயிலுக்கு வலப்புறத்தே தேர்முட்டிக்கு அருகே உள்ளது.
- இங்கு அன்றாடம் வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

"திருப்புவனம்' என்ற சொல் வெள்ளையர்கள் ஆட்சிக் காலத்தில் உண்டானது.

'திருப்புவனம்' என்று அழைப்பது தவறாகும்.

திருப்பூவணத்தில் சிவலிங்கம் 'பூவால் ஆனது பூவால் ஆனதால் 'பூவணன்' எனக் காரணப் பெயர் உண்டானது. பூவணன் தோன்றிய இடம் 'பூவணம்' என்று அழைக்கப்பட்டது.

திரு(மகாலெட்சுமி) வந்து வணங்கிய தலம் என்பதால் 'திரு' என்று அடைமொழி சேர்ந்து, 'திருப்பூவணம்' என்றழைக்கப்படுகிறது. பூவணம் என்ற சொல்லை வடநூலோர் 'பூவனம்' எனப் பொருள் கொண்டு புராணங்களில் 'புஷ்பவனம்' என வடமொழியில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

திருப்பூவணத்திற்கு முத்தியாச்சிரமம், சிதம்பரம், ரகசிய சிதம்பரம், தட்சிண காசி, சதுர்வேதபுரம், பிதிர் முத்திபுரம், பிதிர் மோட்சபுரி, பாஸ்கரபுரம், பிரமபுரம், இலக்குமிபுரம் என்றும் பெயர்கள் உண்டு.

சீவசமாதிகள்

திருப்பூவணத்தில் பதினெட்டுச் சித்தர்களில் ஒருவரான 'கோரக்கரின்' சீவசமாதி உள்ளது.

இது கோயிலுக்கு வலப்புறத்தே தேர்முட்டிக்கு அருகே உள்ளது.

இங்கு அன்றாடம் வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

- ❖ தேசிய நெடுஞ்சாலையில் அரசு மருத்துவ மனைக்கு எதிரே 'கத்தரிகாய் சித்தரின்' சீவசமாதி உள்ளது.
- ❖ கத்தரி வெயிலில் காய்ந்து தவம் இயற்றியதால் இவருக்கு இக்காரணப் பெயர் உண்டானது.
- ❖ இச்சித்தருக்குத் திருப்பரங்குன்றத்தில் உள்ள வெயில் உகந்த அம்மன் கோயில் வாயிலில் வழிபாடு இன்றும் நடைபெறுகிறது.
- ❖ ஆதீன குருமகா சந்நிதானத்தின் சீவசமாதி அம்மன் சன்னதி தெருவிற்கு அருகே உள்ளது.
- ❖ பகீரதன் தனது முன்னோர்களின் ஆன்மாக்கள் முத்தியடையக் கங்கையைப் பூமிக்குக் கொண்டு வர வேண்டிக் கடுந்தவம் செய்தான். அவனது தவத்தை ஏற்று கங்காதேவியும் பூமிக்கு வந்தாள். அவளைச் சிவபெருமான் தனது திருமுடியில் விழச்செய்தார்.
- ❖ பகீரதன் நடந்து செல்ல, அவரைப் பின்தொடர்ந்து கங்கையானது பூமியிலே நதியாக ஓடியது.
- ❖ பகீரதன் அவனது முன்னோர்களின் அஸ்திகள் நிறைந்திருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தான். இதனால் அவ்விடத்திலிருந்த அஸ்தி முழுவதும் கங்கையின் நீரில் கரைந்தன. இதனால் பகீரதனின் முன்னோர்கள் முத்தி பெற்றனர்.
- ❖ இச்சிறப்புக் காரணத்தினால் அந்த இடம் 'காசி' எனச் சிறப்புற்று விளங்குகிறது. அன்றிலிருந்து காசியில்

தேசிய நெடுஞ்சாலையில் அரசு மருத்துவ மனைக்கு எதிரே 'கத்தரிகாய் சித்தரின்' சீவசமாதி உள்ளது.

கத்தரி வெயிலில் காய்ந்து தவம் இயற்றியதால் இவருக்கு இக்காரணப் பெயர் உண்டானது.

இச்சித்தருக்குத் திருப்பரங்குன்றத்தில் உள்ள வெயில் உகந்த அம்மன் கோயில் வாயிலில் வழிபாடு இன்றும் நடைபெறுகிறது.

ஆதீன குருமகா சந்நிதானத்தின் சீவசமாதி அம்மன் சன்னதி தெருவிற்கு அருகே உள்ளது.

பகீரதன் தனது முன்னோர்களின் ஆன்மாக்கள் முத்தியடையக் கங்கையைப் பூமிக்குக் கொண்டு வர வேண்டிக் கடுந்தவம் செய்தான். அவனது தவத்தை ஏற்று கங்காதேவியும் பூமிக்கு வந்தாள். அவளைச் சிவபெருமான் தனது திருமுடியில் விழச்செய்தார்.

பகீரதன் நடந்து செல்ல, அவரைப் பின்தொடர்ந்து கங்கையானது பூமியிலே நதியாக ஓடியது.

பகீரதன் அவனது முன்னோர்களின் அஸ்திகள் நிறைந்திருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தான். இதனால் அவ்விடத்திலிருந்த அஸ்தி முழுவதும் கங்கையின் நீரில் கரைந்தன. இதனால் பகீரதனின் முன்னோர்கள் முத்தி பெற்றனர்.

இச்சிறப்புக் காரணத்தினால் அந்த இடம் 'காசி' எனச் சிறப்புற்று விளங்குகிறது. அன்றிலிருந்து காசியில்

அஸ்தியைக் கரைத்து முன்னோர்களை முத்தி அடையச் செய்கின்றனர்.

- இச்சிறப்புடைய கங்கையைத் தனது திருமுடியில் தாங்கிய சிவபிரான், மீனாட்சியம்மனைத் திருக் கலியாணம் செய்தற்பொருட்டு மதுரை வந்தார். அப்போது விருந்து உண்டு களித்த குண்டோதர பூதத்தின் தாகத்தை தணிக்கத் தண்ணீர் தேவைப்பட்டது. எனவே சிவபெருமான் குண்டோ தரனிடம் 'கை–வை' எனச் சொல்லித் தனது சடாமுடியிலிருந்து கங்கையைச் சிறிது அவிழ்த்து விட்டார்.
- மீனாட்சியம்மையின் திருக்கலியாண நாளிலிருந்து கங்கையே வைகை நதியாக ஓட ஆரம்பித்தது.
- குண்டோதர பூதம் வைகை ஆற்றுநீரைக் குடித்து விடுவதால் வைகை நதி கடலில் கலப்பதில்லை.
- கங்கை நதிக்கரையில் காசி எவ்வளவு சிறப்பு டையதோ அதைவிடச் சிறப்புடன் வைகை நதிக்கரையில் திருப்பூவணம் விளங்குகிறது.
- நடனமாடும் அரங்கு, திறைகள் அளக்கும் மண்டபம், தமிழ்க்கழக மண்டபம், ஆரணங்குகள் முழங்கு மண்டபம், முரசு அதிரும் மண்டபம், தான மண்டபம், தந்திரம் பயிலும் சைவ மடம், முனிவர் சதுக்கம், கடைவீதி, யாகமண்டபம், சித்திரமண்டபம் ஆகியன முன்காலத்தில் கோயில் அருகே இருந்தன.
- இப்போது இம்மண்டபங்களைஅகற்றி, அவற்றின்

அஸ்தியைக் கரைத்து முன்னோர்களை முத்தி அடையச் செய்கின்றனர்.

இச்சிறப்புடைய கங்கையைத் தனது திருமுடியில் தாங்கிய சிவபிரான், மீனாட்சியம்மனைத் திருக் கலியாணம் செய்தற்பொருட்டு மதுரை வந்தார். அப்போது விருந்து உண்டு களித்த குண்டோதர பூதத்தின் தாகத்தை தணிக்கத் தண்ணீர் தேவைப்பட்டது. எனவே சிவபெருமான் குண்டோ தரனிடம் 'கை-வை' எனச் சொல்லித் தனது சடாமுடியிலிருந்து கங்கையைச் சிறிது அவிழ்த்து விட்டார்.

மீனாட்சியம்மையின் திருக்கலியாண நாளிலிருந்து கங்கையே வைகை நதியாக ஓட ஆரம்பித்தது.

குண்டோதர பூதம் வைகை ஆற்றுநீரைக் குடித்து விடுவதால் வைகை நதி கடலில் கலப்பதில்லை.

* கங்கை நதிக்கரையில் காசி எவ்வளவு சிறப்பு டையதோ அதைவிடச் சிறப்புடன் வைகை நதிக்கரையில் திருப்பூவணம் விளங்குகிறது.

நடனமாடும் அரங்கு, திறைகள் அளக்கும் மண்டபம், தமிழ்க்கழக மண்டபம், ஆரணங்குகள் முழங்கு மண்டபம். முரசு அதிரும் மண்டபம், தான மண்டபம், தந்திரம் பயிலும் சைவ மடம், முனிவர் சதுக்கம், கடைவீதி, யாகமண்டபம், சித்திரமண்டபம் ஆகியன முன்காலத்தில் கோயில் அருகே இருந்தன.

இப்போது இம்மண்டபங்களை அகற்றி, அவற்றின்

கற்களைக் கொண்டு திருக்கோயில் மதிலை அமைந்துள்ளனர். எனவே இம்மண்டபங்களில் இருந்த கல்வெட்டுகள் சிதையுண்டு கோயிலின் சுற்றுச் சுவர்களில் பகுதிபகுதியாக காணக் கிடக்கின்றன.

❖ திருப்பூவணத்தில் நவதீர்த்தங்கள் உள்ளன அவை 1) பாபநாச தீர்த்தம், 2) மணிகன்னிகைத் தீர்த்தம், 3) பிரம தீர்த்தம், 4) விஷ்ணு தீர்த்தம் 5) இலக்குமி தீர்த்தம் 6) சந்திர தீர்த்தம் 7) மார்க்கண்டேய தீர்த்தம் 8) வசிட்ட தீர்த்தம் 9) இந்திர தீர்த்தம் என்பன.

❖ பாபநாச தீர்த்தம் – மூல லிங்கத்தின் நேர் பார்வையில் ஓடும் வைகையாறே பாபநாச தீர்த்தமாகும். இதற்கு 'வேகவதி' என்ற பெயரும் உண்டு.

❖ இதில் சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரத்திலே முழுமதியுடன் கூடிய நாளிலே தீர்த்தமாடித் திருப்பூவணநாதரை வணங்குவோர் நற்கதி அடைவர்.

❖ சூரிய உதயத்திற்கு முன் இதில் மூழ்கி, சிவராத்திரியிலே தூக்கமின்றி, நான்கு யாமமும் விழித்திருந்து சிவபூசை செய்து தானங்கள் செய்வோர், இறுதியிலே சிவலோகம் சேர்ந்து வாழ்வர்.

மணிகன்னிகைத் தீர்த்தம்

❖ மின்னன்னை கோயிலுக்கு (முருகன் கோயிலாகத் தற்போது உள்ளது) எதிரே உள்ள மிகப் பெரிய குளமே மணிகன்னிகா தீர்த்தமாகும்.

கற்களைக் கொண்டு திருக்கோயில் மதிலை அமைத்துள்ளனர். எனவே இம்மண்டபங்களில் இருந்த கல்வெட்டுகள் சிதையுண்டு கோயிலின் சுற்றுச் சுவர்களில் பகுதிபகுதியாக காணக் கிடக்கின்றன.

திருப்பூவணத்தில் நவதீர்த்தங்கள் உள்ளன. அவை 1) பாபநாச தீர்த்தம், 2) மணிகன்னிகைத் தீர்த்தம், 3) பிரம தீர்த்தம், 4) விஷ்ணு தீர்த்தம் 5) இலக்குமி தீர்த்தம் 6) சந்திர தீர்த்தம் 7) மார்க்கண்டேய தீர்த்தம் 8) வசிட்ட தீர்த்தம் 9) இந்திர தீர்த்தம் என்பன.

பாபநாச தீர்த்தம் - மூல லிங்கத்தின் நேர் பார்வையில் ஒடும் வைகையாறே பாபநாச தீர்த்தமாகும். இதற்கு 'வேகவதி' என்ற பெயரும் உண்டு.

இதில் சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரத்திலே முழுமதியுடன் கூடிய நாளிலே தீர்த்தமாடித் திருப்பூவணநாதரை வணங்குவோர் நற்கதி அடைவர்.

சூரிய உதயத்திற்கு முன் இதில் மூழ்கி, சிவராத்திரியிலே தூக்கமின்றி, நான்கு யாமமும் விழித்திருந்து சிவபூசை செய்து தானங்கள் செய்வோர், இறுதியிலே சிவலோகம் சேர்ந்து வாழ்வர்.

மணிகன்னிகைத் தீர்த்தம்

மின்னன்னை கோயிலுக்கு (முருகன் கோயிலாகத் தற்போது உள்ளது) எதிரே உள்ள மிகப் பெரிய குளமே மணிகன்னிகைத் தீர்த்தமாகும்.

- ❖ இதற்கு மணிகர்ணிகா தீர்த்தம், மணிகுண்டம், தேவி குண்டம் என்ற பெயர்களும் உண்டு.
- ❖ இத்தீர்த்தம் சூரியனால் சதுரவடிவில் தோண்டப் பெற்றது.
- ❖ இத்தீர்த்தத்திலே விண்ணுலகத்திலிருந்து அமிர்தத் துளி ஒன்று மணியாய் வந்து வீழ்ந்துள்ளது.
- ❖ மணிகன்னிகைத் தீர்த்தத்தைப் பருகினோர் மண் ணுலகில் நீடுவாழ்வர். முடிவிலே கைலாயஞ்சேர்வர்.
- ❖ இத்தீர்த்தத்தில் உயிர்நீத்தோர் சுவர்க்கம் சேர்வர். இறந்தோரின் ஓர் அங்கமோ எலும்போ இத்தீர்த் தத்தில் வீழ்ந்தால் அந்த உடலுக்குடையவர் சிவகதியடைவர்.
- ❖ இத்தீர்த்தக் கரையிலே நீத்தார்களுக்குத் (முன்னோர் களுக்குத்) தர்ப்பணம் செய்தால், நீத்தார்கள் பெரிதும் மகிழ்ந்து தனது சந்ததியினரை ஆசீர்வதிப்பர்.
- ❖ திருமால், பிரமன், ருத்திரன் (சிவன்), இந்திரன், நாரதன், சனகாதி முனிவர்கள், கருடர், கந்தருவர், கபிலர், மற்றும் பல தேவர்களும் முனிவர்களும் இத்தீர்த்தத்திலே வாழ்கின்றனர்.
- ❖ இத்தீர்த்தம் பிரமதேவனால் மராமத்து செய்யப் பெற்றுள்ளது.
- ❖ மணிகன்னிகா தீர்த்தம் சிவபெருமானுக்குச் சமமான பெருமைகள் உடையது.

இதற்கு மணிகர்ணிகா தீர்த்தம், மணிகுண்டம், தேவி குண்டம் என்ற பெயர்களும் உண்டு.

இத்தீர்த்தம் சூரியனால் சதுரவடிவில் தோண்டப் பெற்றது.

இத்தீர்த்தத்திலே விண்ணுலகத்திலிருந்து அமிர்தத் துளி ஒன்று மணியாய் வந்து வீழ்ந்துள்ளது.

மணிகன்னிகைத் தீர்த்தத்தைப் பருகினோர் மண்ணுலகில் நீடுவாழ்வர். முடிவிலே கைலாயம் சேர்வர்.

இத்தீர்த்தத்தில் உயிர்நீத்தோர் சுவர்க்கம் சேர்வர். இறந்தோரின் ஓர் அங்கமோ எலும்போ இத்தீர்த் தத்தில் வீழ்ந்தால் அந்த உடலுக்கு உரியவர் சிவகதியடைவர்.

இத்தீர்த்தக் கரையிலே நீத்தார்களுக்குத் (முன்னோர்களுக்குத்) தர்ப்பணம் செய்தால், நீத்தார்கள் பெரிதும் மகிழ்ந்து தனது சந்ததியினரை ஆசீர்வதிப்பர்.

திருமால், பிரமன், ருத்திரன் (சிவன்), இந்திரன், நாரதன், சனகாதி முனிவர்கள், கருடர், கந்தருவர், கபிலர், மற்றும் பல தேவர்களும் முனிவர்களும் இத்தீர்த்தத்திலே வாழ்கின்றனர்.

இத்தீர்த்தம் பிரமதேவனால் மராமத்து செய்யப் பெற்றுள்ளது.

மணிகன்னிகைத் தீர்த்தம் சிவபெருமானுக்குச் சமமான பெருமைகள் உடையது.

பிரமதீர்த்தம்

- இத்தீர்த்தம் பிரமனால் உண்டாக்கப்பட்டது. திருக் கோயில் வளாகத்தில் விநாயகர் சந்நிதிக்கு எதிரே, யானை மண்டபத்திற்கு அருகே கிணறாக உள்ளது.
- இத்தீர்த்தத்தில் நீராடினால், அறிந்தோ அறியாமலோ செய்த பாவங்கள் அனைத்தும் நீங்கப் பெறும்.
- கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திர தினத்தன்று பிரமதீர்த்தத்திலே நீராடினால் அரக்கர் உருவம் மாறி, அழகான உருவம் பெறுவர்.
- புத்திசுவாதீனம் குறைந்தோர் இதில் நீராடினால் அவர்கள் நல்ல புத்தியைப் பெறுவர்.

விஷ்ணு தீர்த்தம்

- திருப்பூவணேசருக்கு மேற்குத் திசையிலே இரண்டு அம்பு செல்லுந் (400 மீட்டர்) தூரத்திலே திருமால் தனது பெயராலே ஒரு சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தார். ஒரு தீர்த்தமும் உண்டாக்கினார்.
- சித்திரை மாதத்திலே ஞாயிற்றுக்கிழமைகளில் அத்தீர்த்தத்தில் மூழ்கி விஷ்ணு லிங்கத்தை வழிபட்டோர் பாவம் நீங்கிப் பதமுத்தி பெறுவர்.

இலக்குமி தீர்த்தம்

- திருப்பூவணம் கோயிலுக்கு இடப்புறமாக, தற்போதைய வைகை ஆற்றுப் பாலத்திற்கு அருகே பொது நூலகத்திற்குப் பின்புறம் உள்ளது.

பிரமதீர்த்தம்

* இத்தீர்த்தம் பிரம்மாவால் உண்டாக்கப்பட்டது. திருக் கோயில் வளாகத்தில் விநாயகர் சந்நிதிக்கு எதிரே, யானை மண்டபத்திற்கு அருகே கிணறாக உள்ளது.

இத்தீர்த்தத்தில் நீராடினால், அறிந்தோ அறியாமலோ செய்த பாவங்கள் அனைத்தும் நீங்கப் பெறும்.

* கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திர தினத்தன்று பிரமதீர்த்தத்திலே நீராடினால் அரக்கர் உருவம் மாறி, அழகான உருவம் பெறுவர்.

* புத்திசுவாதீனம் குறைந்தோர் இதில் நீராடினால் அவர்கள் நல்ல புத்தியைப் பெறுவர்.

விஷ்ணு தீர்த்தம்

திருப்பூவணேசருக்கு மேற்குத் திசையிலே இரண்டு அம்பு செல்லும் (400 மீட்டர்) தூரத்திலே திருமால் தனது பெயராலே ஒரு சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தார். ஒரு தீர்த்தமும் உண்டாக்கினார்.

* சித்திரை மாதத்திலே ஞாயிற்றுக்கிழமைகளில் அத்தீர்த்தத்தில் மூழ்கி விஷ்ணு லிங்கத்தை வழிபட்டோர் பாவம் நீங்கிப் பதமுத்தி பெறுவர்.

இலக்குமி தீர்த்தம்

திருப்பூவணம் கோயிலுக்கு இடப்புறமாக, தற்போதைய வைகை ஆற்றுப் பாலத்திற்கு அருகே பொது நூலகத்திற்குப் பின்புறம் உள்ளது.

❖ இத்தீர்த்தத்தின் கரையில் இருந்து இரண்டு பெரிய மருத மரங்களைக் கொண்டு காளையார் கோயில் தேர் செய்யப்பெற்றது.

சந்திர தீர்த்தம்

❖ மின்னம்மையின் கோயிற் கொடிமரத்தருகே மடப்பள்ளி அருகே இத்தீர்த்தம் கிணறாக உள்ளது.

❖ இத்தீர்த்தத்திலிருந்தே மடப்பள்ளிக்குத் தேவையான தண்ணீரைப் பயன்படுத்துவர்.

மார்க்கண்டேய தீர்த்தம்

❖ திருக்கோயிலிலிருந்து இரண்டம்பு செல்லும் (400 மீட்டர்) தூரத்தில் மார்க்கண்ட முனிவரால் தோற்றுவிக்கப்பட்ட மார்க்கண்டேய தீர்த்தம் உள்ளது.

❖ தற்போது மாரியம்மன் கோயிலுக்கு அருகில் குளமாக உள்ளது.

❖ பாலாபிஷேகம் முதலான பல்வேறு திருமஞ்சனங் களையும் மார்க்கண்டன் திருப்பூவணத்திலே செய்து அர்த்தநாரீசனை வழிபட்டுச் சீவன்முத்தி பெற்றான்.

வசிட்ட தீர்த்தம்

❖ மிகுந்த தவ வலிமை உடையவரும், வேதங்கள் அனைத்தையும் ஒதி உணர்ந்தவரும், அவற்றைச் சூத முனிவருக்கு உபதேசித்தவருமான வசிட்ட முனிவரால் தோற்றுவிக்கப்பட்ட தீர்த்தம் இது.

❖ இத்தீர்த்தம் சிவலிங்கத்தின் பார்வையில் இரண்டு

இத்தீர்த்தத்தின் கரையில் இருந்து இரண்டு பெரிய மருத மரங்களைக் கொண்டு காளையார் கோயில் தேர் செய்யப்பெற்றது.

சந்திர தீர்த்தம்

மின்னம்மையின் கோயிற் கொடிமரத்தருகே மடப்பள்ளி அருகே இத்தீர்த்தம் கிணறாக உள்ளது.

இத்தீர்த்தத்திலிருந்தே மடப்பள்ளிக்குத் தேவையான தண்ணீரைப் பயன்படுத்துவர்.

மார்க்கண்டேய தீர்த்தம்

திருக்கோயிலிலிருந்து இரண்டம்பு செல்லும் (400 மீட்டர்) தூரத்தில் மார்க்கண்ட முனிவரால் தோற்றுவிக்கப்பட்ட மார்க்கண்டேய தீர்த்தம் உள்ளது.

தற்போது மாரியம்மன் கோயிலுக்கு அருகில் குளமாக உள்ளது.

பாலாபிஷேகம் முதலான பல்வேறு திருமஞ்சனங் களையும் மார்க்கண்டன் திருப்பூவணத்திலே செய்து அர்த்தநாரீசனை வழிபட்டுச் சீவன்முத்தி பெற்றான்.

வசிட்ட தீர்த்தம்

மிகுந்த தவ வலிமை உடையவரும், வேதங்கள் அனைத்தையும் ஓதி உணர்ந்தவரும், அவற்றைச் சூத முனிவருக்கு உபதேசித்தவருமான வசிட்ட முனிவரால் தோற்றுவிக்கப்பட்ட தீர்த்தம் இது.

இத்தீர்த்தம் சிவலிங்கத்தின் பார்வையில் இரண்டு

கணை செல்லும் தூரத்தில் உள்ளது. இதில் மூழ்குவோர் சிவபெருமானின் திருவடி நீழலில் வாழ்வர்.

- இத்தீர்த்தம், ஆற்றின் வடகரையில் ஆடித்தபசு மண்டபத்திற்கு அருகில் குளமாக இருந்துள்ளது.

இந்திர தீர்த்தம்

- கிருதுமால் ஆற்றினை மேல் அணிந்து விளங்குவது இந்திர தீர்த்தம்.
- இத்தீர்த்தத்தில் பங்குனி மாதம் உத்திர நட்சத்திரத்தில் தீர்த்தமாடினால் யாகபலத்தைப் பெறுவர்.
- பனிரெண்டு தினம் மூழ்குவோர்ஆயிரம் யாக பலத்தைப் பெறுவர்.
- ஒரு மாதம் மூழ்குவோர் அசுவமேத யாகபலனைப் பெறுபவர்.
- இத் தீர்த்தத்தைப் பருகுவோர் அக்கினி ஹோம பலனைப் பெறுவர்.
- இத்தீர்த்தம் மடப்புரம் செல்லும் வழியில் ஆற்றங்கரையில் கிணற்று வடிவில் உள்ளது.
- அதனருகே ஓர் விநாயகர் கோயிலும் உள்ளது.

விருட்சம்

- பழங்காலத்தில் மக்கள் மரங்களின் அடியிலேயே தெய்வங்களை வைத்து வழிபட்டனர்.

கணை செல்லும் தூரத்தில் உள்ளது. இதில் மூழ்குவோர் சிவபெருமானின் திருவடி நீழலில் வாழ்வர்.

இத்தீர்த்தம். ஆற்றின் வடகரையில் ஆடித்தபசு மண்டபத்திற்கு அருகில் குளமாக இருந்துள்ளது.

இந்திர தீர்த்தம்

கிருதமால் ஆற்றினை மேல் அணிந்து விளங்குவது இந்திர தீர்த்தம்.

இத்தீர்த்தத்தில் பங்குனி மாதம் உத்திர நட்சத்திரத்தில் தீர்த்தமாடினால் யாகபலத்தைப் பெறுவர்.

பன்னிரெண்டு தினம் மூழ்குவோர் ஆயிரம் யாக பலத்தைப் பெறுவர்.

ஒரு மாதம் மூழ்குவோர் அசுவமேத யாகபலனைப் பெறுவர்.

இத் தீர்த்தத்தைப் பருகுவோர் அக்கினி ஹோம பலனைப் பெறுவர்.

இத்தீர்த்தம் மடப்புரம் செல்லும் வழியில் ஆற்றங்கரையில் கிணற்று வடிவில் உள்ளது.

அதனருகே ஓர் விநாயகர் கோயிலும் உள்ளது.

விருட்சம்

பழங்காலத்தில் மக்கள் மரங்களின் அடியிலேயே தெய்வங்களை வைத்து வழிபட்டனர்.

- ❖ பின்னர் களிமண், செங்கல், மரம் இவைகளால் கோயில் சமைத்தனர்.
- ❖ மரங்களின் அடியில் ஆதிகாலத்தில் கோயில் ஏற்பட்டதால் அந்த மரங்களைப் புனிதமாகக் கருதி அவைகளைத் தலவிருட்சம் எனப்பெயரிட்டு அழைத்தனர்.
- ❖ திருப்பூவணத்தில், முதலாம் யுகத்திலே பாரிசாதமரம் தலவிருட்சமாக இருந்தது.
- ❖ இரண்டாம் யுகத்திலே வில்வமரம் தல விருட்சமாக இருந்தது.
- ❖ மூன்றாம் யுகத்திலே வன்னிமரம் தலவிருட்சமாக இருந்தது.
- ❖ நான்காம் யுகமாகிய இந்தக் கலியுகத்திலே பலா மரம் தலவிருட்சமாக உள்ளது.
- ❖ தேவி வளர்த்த தெய்வப் பலாமரத்தின் அடியிலே 'வேர்ப் பலா' போலச் சிவலிங்கம் முளைத்தது என்று திருப்பூவணநாதர் உலாவில் பாடப் பெற்றுள்ளது.
- ❖ சிவலிங்கத்தை வில்வத்தால் பூசை செய்தால் மிகுந்த நன்மையுண்டு.
- ❖ திருப்பூவணம் கோயிலின் கல்தூண் சிற்பங்களில் பாரிசாத மரம் செதுக்கப்பட்டுள்ளது.
- ❖ அமுதம் வேண்டித் தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தனர். அதிலிருந்து பாரிசாதம்,

பின்னர் களிமண், செங்கல், மரம் இவற்றால் கோயில் சமைத்தனர்.

மரங்களின் அடியில் ஆதிகாலத்தில் கோயில் ஏற்பட்டதால் அந்த மரங்களைப் புனிதமாகக் கருதி அவைகளைத் தலவிருட்சம் எனப் பெயரிட்டு அழைத்தனர்.

திருப்பூவணத்தில், முதலாம் யுகத்திலே பாரிசாதமரம் தலவிருட்சமாக இருந்தது.

இரண்டாம் யுகத்திலே வில்வமரம் தல விருட்சமாக இருந்தது.

மூன்றாம் யுகத்திலே வன்னிமரம் தலவிருட்சமாக இருந்தது.

நான்காம் யுகமாகிய இந்தக் கலியுகத்திலே பலா மரம் தலவிருட்சமாக உள்ளது.

தேவி வளர்த்த தெய்வப் பலாமரத்தின் அடியிலே 'வேர்ப் பலா' போலச் சிவலிங்கம் முளைத்தது என்று திருப்பூவணநாதர் உலாவில் பாடப் பெற்றுள்ளது.

சிவலிங்கத்தை வில்வத்தால் பூஜை செய்தால் மிகுந்த நன்மை உண்டு.

*திருப்பூவணம் கோயிலின் கல்தூண் சிற்பங்களில் பாரிசாத மரம் செதுக்கப்பட்டுள்ளது.

அமுதம் வேண்டித் தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தனர். அதிலிருந்து பாரிசாதம்,

கற்பக விருட்சம் போன்ற தெய்வீக மரங்களும் தோற்றம் பெற்றன. பாரிசாதம் தேவலோகத்தில் உள்ள மரமாகும். இது வேண்டுவதைத் தரக்கூடிய இயல்புடையது.

❖ தேவலோகத்திலிருந்து பூமிக்கு வரும் போது நாரதர் ஒருமுறை பாரிசாதப்பூ ஒன்றைப் பூமிக்குக் கொண்டு வந்து கிருஷ்ணரிடம் கொடுத்தார். இச்செய்தியறிந்த சத்யபாமா தனக்குப் பாரிசாதமரம் வேண்டுமென்று கேட்கிறாள். அவள் பொருட்டுத் தேவலோகத் திலிருந்த அம்மரத்தைக் கிருஷ்ணர் பூமிக்குக் கொண்டு வருகிறார்.

❖ பாரிசாத மரம் கைலாயத்தில் உள்ளது. உமையம்மை தவம் மேற்கொள்ள வேண்டித் திருப்பூவணம் வந்தபோது பாரிசாதத்தின் கிளையைக் கொண்டு வந்து நட்டுவைத்து வளர்த்து அதன் நிழலிலே தவம் செய்தார்.

❖ பாரிசாதம் ஓர் அறிவுடைய மரம்.

❖ இதனைச்சுற்றி வந்து வழிபட்டால், கேட்டதைக் கொடுக்கும்.

❖ பாரிசாதப் பூவின் மணம், அதனைச் சுற்றிலும் யோசனை (சுமார் 18 கி.மீ) தூரம் பரவியிருக்கும்.

❖ இம்மரம் பணை (பருத்த கிளைகள்) பல உடையது.

❖ இம்மரத்தின் அடியிலே வாழும் உயிரினங்கள் யாவும் தம்முடைய பகையை மறந்து மகிழ்ச்சியாய் வாழும்.

*	கற்பக விருட்சம் போன்ற தெய்வீக மரங்களும் தோற்றம் பெற்றன. பாரிசாதம் தேவலோகத்தில் உள்ள மரமாகும். இது வேண்டுவதைத் தரக்கூடிய இயல்புடையது.

தேவலோகத்திலிருந்து பூமிக்கு வரும் போது நாரதர் ஒருமுறை பாரிசாதப்பூ ஒன்றைப் பூமிக்குக் கொண்டு வந்து கிருஷ்ணரிடம் கொடுத்தார். இச்செய்தியறிந்த சத்யபாமா தனக்குப் பாரிசாதமரம் வேண்டுமென்று கேட்கிறாள். அவள் பொருட்டுத் தேவலோகத்திலிருந்த அம்மரத்தைக் கிருஷ்ணர் பூமிக்குக் கொண்டு வருகிறார்.

பாரிசாத மரம் கைலாயத்தில் உள்ளது. உமையம்மை தவம் மேற்கொள்ள வேண்டித் திருப்பூவணம் வந்தபோது பாரிசாதத்தின் கிளையைக் கொண்டு வந்து நட்டுவைத்து வளர்த்து அதன் நிழலிலே தவம் செய்தார்.

பாரிசாதம் ஓர் அறிவுடைய மரம்.

இதனைச்சுற்றி வந்து வழிபட்டால், கேட்டதைக் கொடுக்கும்.

பாரிசாதப் பூவின் மணம், அதனைச் சுற்றிலும் யோசனை (சுமார் 18 கி.மீ) தூரம் பரவியிருக்கும்.

இம்மரம் பணை (பருத்த கிளைகள்) பல உடையது.

இம்மரத்தின் அடியிலே வாழும் உயிரினங்கள் யாவும் தம்முடைய பகையை மறந்து மகிழ்ச்சியாய் வாழும்.

- ❖ பாரிசாதத்தின் அடியிலே திருப்பூவணலிங்கம் தோன்றியதால், திருப்பூவணத்தில் இறைவனுக்குப் 'பாரிசாதவனேசுவரர்' என்ற பெயரும் உண்டு.
- ❖ திருப்பூவணத்தில் பாரிசாத மரமானது பாதலத் திலிருந்து (deep layer of the earth) முளைத்தது.
- ❖ சிவம் என்ற சொல்லின் பொருள் 'மங்களம்', 'மகிழ்ச்சி' என்பவனவாகும்.
- ❖ இலிங்கம் சிவபெருமானின் சின்னம் அல்லது அடையாளம் ஆகும்.
- ❖ இலிங்க வழிபாடு எல்லா நாடுகளிலும், எல்லா மக்களின் கலை–கலாசாரங்களிலும் இடம் பெற்றுள்ளது.
- ❖ இலிங்க வழிபாடு சிந்துவெளி நாகரீக காலத்திலேயே (கி.மு. 3000) இருந்தது என்பதற்கு ஹரப்பா – மொகஞ்சதாரோ ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட புதைபொருள் ஆராய்ச்சியில் கிடைத்த சிவலிங்கச் சிலைகளும் – சின்னங்களும் தக்க சான்றாகத் திகழ்கின்றன.
- ❖ திருப்பூவணநாதர், திருப்பூவணமுடையார், பூவணத் தரன், பூவணத்துப் புனிதன், பூவணநாயகன், பூவணன், பாதளஈசன், பாதலப்பரன், பாஸ்கர புரீஸ்வரர் என்பன திருப்பூவணத்திலுள்ள மூல சிவலிங்கத்திற்கு உண்டான பெயர்களாகும்.
- ❖ வடமொழியில் புஸ்பவனேசுவரர், புட்பவனேசுவரர் என்ற பெயர்களும் வழக்கத்தில் உள்ளன.

பாரிசாதத்தின் அடியிலே திருப்பூவணலிங்கம் தோன்றியதால், திருப்பூவணத்தில் இறைவனுக்குப் 'பாரிசாதவனேசுவரர்' என்ற பெயரும் உண்டு.

திருப்பூவணத்தில் பாரிசாத மரமானது பாதலத் திலிருந்து (deep layer of the earth) முளைத்தது.

சிவம் என்ற சொல்லின் பொருள் 'மங்களம்', 'மகிழ்ச்சி' என்பனவாகும்.

* சிவலிங்கம் சிவபெருமானின் சின்னம் அல்லது அடையாளம் ஆகும்.

சிவலிங்க வழிபாடு எல்லா நாடுகளிலும், எல்லா மக்களின் கலை-கலாசாரங்களிலும் இடம் பெற்றுள்ளது.

சிவலிங்க வழிபாடு சிந்துவெளி நாகரீக காலத்திலேயே (கி.மு. 3000) இருந்தது என்பதற்கு ஹரப்பா மொகஞ்சதாரோ ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட புதைபொருள் ஆராய்ச்சியில் கிடைத்த சிவலிங்கச் சிலைகளும் சின்னங்களும் தக்க சான்றாகத் திகழ்கின்றன.

திருப்பூவணநாதர், திருப்பூவணமுடையார், பூவணத் தரன், பூவணத்துப் புனிதன், பூவணநாயகன், பூவணன், பாதளஈசன், பாதலப்பரன், பாஸ்கர புரீஸ்வரர் என்பன திருப்பூவணத்திலுள்ள மூல சிவலிங்கத்திற்கு உண்டான பெயர்களாகும்.

வடமொழியில் புஸ்பவனேசுவரர், புட்பவனேசுவரர் என்ற பெயர்களும் வழக்கத்தில் உள்ளன.

- திருப்பூவணத்தில் உள்ள சிவலிங்கம் மிகவும் 'புராதனமானது'
- பாரிசாதப்பூவின் தூர் 1728 கோடி வருடங்கள் பூமிக்குள்ளேயே புதைந்திருந்து சிவலிங்கமாக மாறியுள்ளது.
- சிவலிங்கத்தின் வேர் பாதாளம் வரை பாய்ந்துள்ளது.
- The Siva Lingam at Tiruppuvanam is a fossible of Parijatha Flower.

சோதிலிங்கம்

- இந்தியத் திருநாட்டில் 12 சோதிலிங்கங்கள் இருப்பதாக ஆன்மீகப் பெரியோர்கள் பட்டியலிட்டுக் கூறுகின்றனர்.
- 'திருப்பூவண நாதரை'ச் சோதிலிங்கம் எனத் திருப்பூவணப் புராணம் குறிப்பிடுகிறது.
- திருப்பூவண உற்சவ மூர்த்திக்கு, அழகிய பிரான், அழகிய நாயகன், அழகியநாயகர், பொன்னனையான் ஆகிய பெயர்கள் உண்டு.

திருவிளையாடல் நடைபெற்ற திருத்தலம்

- உற்சவர் திருமேனியைச் செய்திடத் தேவையான தங்கத்தைத் தயாரித்துக் கொடுத்தவர் மதுரை சிவபெருமான் ஆவார்.
- மதுரை சோமசுந்தரேஸ்வரர், திருப்பூவணத்தில் திருப் பணியைச் செய்திருப்பது, எத்தலத்திற்கும் இல்லாத சிறப்பாகும்.

*	திருப்பூவணத்தில் உள்ள சிவலிங்கம் மிகவும் 'புராதனமானது'

பாரிசாதப்பூவின் துார் 1728 கோடி வருடங்கள் பூமிக்குள்ளேயே புதைந்திருந்து சிவலிங்கமாக மாறியுள்ளது.

சிவலிங்கத்தின் வேர் பாதாளம் வரை பாய்ந்துள்ளது.

*	The Siva Lingam at Tiruppuvanam is a fossible of Parijatha Flower.

சோதிலிங்கம்

*	இந்தியத் திருநாட்டில் 12 சோதிலிங்கங்கள் இருப்பதாக ஆன்மீகப் பெரியோர்கள் பட்டியலிட்டுக் கூறுகின்றனர்.

'திருப்பூவண நாதரை'ச் சோதிலிங்கம் எனத் திருப்பூவணப் புராணம் குறிப்பிடுகிறது.

திருப்பூவண உற்சவ மூர்த்திக்கு, அழகிய பிரான், அழகிய நாயகன், அழகியநாயகர், பொன்னனையான் ஆகிய பெயர்கள் உண்டு.

திருவிளையாடல் நடைபெற்ற திருத்தலம்

உற்சவர் திருமேனியைச் செய்திடத் தேவையான தங்கத்தைத் தயாரித்துக் கொடுத்தவர் மதுரை சிவபெருமான் ஆவார்.

மதுரை சோமசுந்தரேஸ்வரர் திருப்பூவணம் திருப்பணிக்குத் தங்கம் செய்து கொடுத்திருப்பது, எத்தலத்திற்கும் இல்லாத சிறப்பாகும்.

- ❖ பொன்னனையாள் என்பவள் திருப்பூவணம் கோயிலில் நடன மாது.
- ❖ இவளுக்குத் தங்கத்தினால் உற்சவர் செய்ய வேண்டும் என்று விருப்பம் உண்டானது.
- ❖ உற்சவரைச் செய்திடத் தேவையான தங்கம் அவளிடமில்லை.
- ❖ அவள் கையில் வரும் பொருள் எல்லாம் அடியவர்களுக்கு அன்னதானம் செய்வதிலேயே செலவானது.
- ❖ மதுரை சிவபெருமான் சித்தர் வடிவில் பொன் னனையாள் மாளிகைக்கு எழுந்தருளி அனைத்து உலோகப் பாத்திரங்களையும் கொண்டுவரச் செய்து அவற்றில் திருநீற்றைச் சிந்தினார். “இவற்றை இன்று இரவு தீயிலிட்டுக் காய்ச்சுங்கள் தங்கம் கிடைக்கும்” எனக்கூறி மறைந்தார்.
- ❖ பொன்னனையாள் அவ்வாறே செய்யத் தங்கம் கிடைத்தது. அதனைக் கொண்டு திருப்பூவணத்து உற்சவ மூர்த்தியை வார்த்து எடுத்தாள்.
- ❖ வார்ப்பை உடைத்து உற்சவ மூர்த்தியை வெளியே எடுக்கும் போது மிகவும் அழகாக இருந்தது.
- ❖ அதனைப் பொன்னனையாள், “அச்சோ அழகிய பிரானோ” என்று அன்பினால் அள்ளி பொன்ன னையாள் முத்தங் கொன்டாள்.
- ❖ இதனால், அவளது கைநகம் பட்டு இறைவனின் கன்னத்தில் நகக்குறி உண்டானது.

பொன்னனையாள் என்பவள் திருப்பூவணம் கோயிலில் நடன மாது.

இவளுக்குத் தங்கத்தினால் உற்சவர் செய்ய வேண்டும் என்று விருப்பம் உண்டானது.

உற்சவரைச் செய்திடத் தேவையான தங்கம் அவளிடமில்லை.

அவள் கையில் வரும் பொருள் எல்லாம் அடியவர்களுக்கு அன்னதானம் செய்வதிலேயே செலவானது.

மதுரை சிவபெருமான் சித்தர் வடிவில் பொன் னனையாள் மாளிகைக்கு எழுந்தருளி அனைத்து உலோகப் பாத்திரங்களையும் கொண்டுவரச் செய்து அவற்றில் திருநீற்றைச் சிந்தினார். "இவற்றை இன்று இரவு தீயிலிட்டுக் காய்ச்சுங்கள் தங்கம் கிடைக்கும் எனக்கூறி மறைந்தார்.

பொன்னனையாள் அவ்வாறே செய்யத் தங்கம் கிடைத்தது. அதனைக் கொண்டு திருப்பூவணத்து உற்சவ மூர்த்தியை வார்த்து எடுத்தாள்.

வார்ப்பை உடைத்து உற்சவ மூர்த்தியை வெளியே எடுக்கும் போது மிகவும் அழகாக இருந்தது.

அதனைப் பொன்னனையாள், "அச்சோ அழகிய பிரானோ" என்று அன்பினால் அள்ளி பொன்ன னையாள் முத்தங் கொன்டாள்.

இதனால், அவளது கைநகம் பட்டு இறைவனின் கன்னத்தில் நகக்குறி உண்டானது.

❖ இந்நகக் குறியை இன்றும் உற்சவர் திருமேனியில் காணலாம்.

❖ அழகிய பிரானோ! என்று பொன்னனையாள் கூறியது பொருட்டு, உற்சவரின் திருநாமம் 'அழகிய பிரான்' 'அழகிய நாயகர்' என்ற பெயர்களால் அழைக்கப் படுகிறார்.

❖ இக்கதை 36ஆவது திருவிளையாடற் புராணமாகப் பாடப்பெற்றுள்ளது.

❖ உற்சவமூர்த்தி பொன்னால் செய்யப்பட்டதால், அவருக்கு 'பொன்னனையான்' என்ற காரணப் பெயர் விளங்கி வருகிறது.

❖ திருப்பூவணத்தில் அம்மைக்கு மின்னனையாள், மின்னன்னை, மின்னம்மை, அழகியமின்னம்மை, அழகிய நாயகி, பச்சைவளர் நாயகி, திருநயன வல்லி என்ற திருநாமங்கள் உள்ளன. பொற்கொடி என்ற திருநாமம் உள்ளது. 'நாதவதி' என்றும் 'சுந்தரி' என்றும் பெயர்கள் உண்டு.

❖ மின்னம்மை பச்சை வடிவினள்.

❖ மின்னல் போன்று, விளங்குகின்ற காரணத்தினால் 'மின்னனையாள்' என்ற காரணப் பெயர் ஏற்பட்டது.

❖ மின்னல் போன்ற இடையைப் பெற்றவள் என்றும் கூறுவர்.

* இந்நகக் குறியை இன்றும் உற்சவர் திருமேனியில் காணலாம்.

அழகிய பிரானோ! என்று பொன்னனையாள் கூறியது பொருட்டு, உற்சவரின் திருநாமம் 'அழகிய பிரான்' 'அழகிய நாயகர்' என்ற பெயர்களால் அழைக்கப் படுகிறார்.

இக்கதை 36ஆவது திருவிளையாடற் புராணமாகப் பாடப்பெற்றுள்ளது.

உற்சவமூர்த்தி பொன்னால் செய்யப்பட்டதால், அவருக்கு 'பொன்னனையான்' என்ற காரணப் பெயர் விளங்கி வருகிறது.

திருப்பூவணத்தில் அம்மைக்கு மின்னனையாள், மின்னன்னை, மின்னம்மை, அழகியமின்னம்மை, அழகிய நாயகி, பச்சைவளர் நாயகி, திருநயன வல்லி என்ற திருநாமங்கள் உள்ளன. பொற்கொடி என்ற திருநாமம் உள்ளது. 'நாதவதி' என்றும் 'சுந்தரி' என்றும் பெயர்கள் உண்டு.

மின்னம்மை பச்சை வடிவினள்.

மின்னல் போன்று, விளங்குகின்ற காரணத்தினால் 'மின்னனையாள்' என்ற காரணப் பெயர் ஏற்பட்டது.

மின்னல் போன்ற இடையைப் பெற்றவள் என்றும் கூறுவர்.

முதல் வணக்கம்

- ❖ திருப்பூவணத்தில் முதலில் அம்மையை வணங்கக் கூடாது, சிவலிங்கத்தை வணங்கிய பின்னரே அம்மையை வணங்க வேண்டும்.
- ❖ அம்மனை முதலில் வணங்கினால் அக்கணமே 'அகோரம்' எனும் சித்தபிரமை ஏற்பட்டு நரகம் புகுவர்.
- ❖ சோபன லிங்கம், காசிலிங்கம், சூரியலிங்கம், விஷ்ணுலிங்கம், சந்திரலிங்கம், காளீச்சுரலிங்கம் ஆகிய சிவலிங்கங்களும் திருப்பூவணத்திலே உள்ளன.
- ❖ மணிகன்னிகைத் தீர்த்தத்தின் அருகிலே ஆலமர நிழிலே பிரமன் பூசித்த இலிங்கம் உள்ளது.
- ❖ சூரியன் தன் பெயரால், 'காந்தி நாயகன்' என்ற பெயரில் சிவபெருமானை விதிப்படி பிரதிஷ்டை செய்து வேதங்களை ஓதி பூசை செய்து திருவிழாவை நடத்தி வைத்தான்.
- ❖ அதன் பின்னர் சூரியன் தனது சூரியலோகம் சென்று முறைப்படி ஆட்சி செய்யலானான்.
- ❖ சூரியன் வழிபட்ட சிவலிங்கத்திற்குக் 'காந்தி நாயகன்' என்று பெயர்.
- ❖ சந்திரன் பூசித்த சந்திரலிங்கம் உள்ளது.

விஷ்ணுலிங்கம் (ஆதிகேசவ லிங்கம்)

- ❖ மகாலெட்சுமி திருப்பூவணம் வந்து தவம் மேற்கொண்டார். தவம் முடித்துப் பாவம் நீங்கப் பெற்ற

முதல் வணக்கம்

திருப்பூவணத்தில் முதலில் அம்மையை வணங்கக் கூடாது, சிவலிங்கத்தை வணங்கிய பின்னரே அம்மையை வணங்க வேண்டும்.

அம்மனை முதலில் வணங்கினால் அக்கணமே 'அகோரம்' எனும் சித்தபிரமை ஏற்பட்டு நரகம் புகுவர்.

சோபன லிங்கம், காசிலிங்கம், சூரியலிங்கம், விஷ்ணுலிங்கம், சந்திரலிங்கம், காளீச்சுரலிங்கம் ஆகிய சிவலிங்கங்களும் திருப்பூவணத்திலே உள்ளன.

மணிகன்னிகைத் தீர்த்தத்தின் அருகிலே ஆலமர நிழிலே பிரமன் பூசித்த லிங்கம் உள்ளது.

சூரியன் தன் பெயரால், 'காந்தி நாயகன்' என்ற பெயரில் சிவபெருமானை விதிப்படி பிரதிஷ்டை செய்து வேதங்களை ஓதி பூசை செய்து திருவிழாவை நடத்தி வைத்தான்.

அதன் பின்னர் சூரியன் தனது சூரியலோகம் சென்று முறைப்படி ஆட்சி செய்யலானான்.

சூரியன் வழிபட்ட சிவலிங்கத்திற்குக் 'காந்தி நாயகன்' என்று பெயர்.

சந்திரன் பூசித்த சந்திரலிங்கம் உள்ளது.

விஷ்ணுலிங்கம் (ஆதிகேசவ லிங்கம்)

+ மகாலெட்சுமி திருப்பூவணம் வந்து தவம் மேற்கொண்டார். தவம் முடித்துப் பாவம் நீங்கப் பெற்ற

இலக்குமியை அழைத்துச் செல்ல திருமால் திருப்பூவணம் வந்தார்.

- ❖ மூலலிங்கத்திற்கு மேற்கே இரண்டம்பு செல்லும் தூரத்திலே மகாவிஷ்ணு தன்னுடைய பெயரால் ஓர் இலிங்கமும், அதன் எதிரே தீர்த்தம் ஒன்றும் உண்டாக்கினார்.
- ❖ அந்த இலிங்கத்திற்கு விஷ்ணுலிங்கம் என்றும், அத்தீர்த்தத்திற்குத் திருமால் தீர்த்தம் என்றும் பெயர்.
- ❖ "ஆடலில் சிறந்தவர் யார்?" என்று உமையம்மை சிவபெருமானுடன் வாதம் செய்து, போட்டி வைத்து ஆடியது குற்றமாகி அவளைப் பாவமாகப் பிடித்தது. அதனை நீக்கத் திருப்பூவணத்தில் சிவலிங்கம் வைத்து வழிபட்டாள்.
- ❖ இவ்வழிபாட்டால் காளியின் பாவம் நீங்கப் பெற்றது. காளி வழிபட்ட சிவலிங்கமானது மூலலிங்கத்திற்கு வடக்கே கூப்பிடு தூரத்தில் அமைந்துள்ளது.
- ❖ காளிதேவி சபதம் கூறி சங்கரனுடன் ஆடிய இடம் தில்லையாகும். தில்லையில் காளிதேவி ஊருக்கு வெளியே தனியாகக் கோயில் கொண்டிருக்கிறாள். அதே போன்று திருப்பூவணத்திலும் ஆற்றிற்கு வடக்கே மட்டப்புரம் கிராமத்தில் 'அடைக்கலம் கொடுத்த ஐயனார்' கோயிலில், காளிதேவி கோயில் கொண்டுள்ளாள்.
- ❖ திருப்பூவணத்தில் விநாயகர், முருகன், வீரபத்திரன், திரௌபதி, மாரியம்மன் கோயில்களும் உள்ளன.

இலக்குமியை அழைத்துச் செல்ல திருமால் திருப்பூவணம் வந்தார்.

மூலலிங்கத்திற்கு மேற்கே இரண்டம்பு செல்லும் தூரத்திலே மகாவிஷ்ணு தன்னுடைய பெயரால் ஓர் லிங்கமும், அதன் எதிரே தீர்த்தம் ஒன்றும் உண்டாக்கினார்.

அந்த லிங்கத்திற்கு விஷ்ணுலிங்கம் என்றும், அத்தீர்த்தத்திற்குத் திருமால் தீர்த்தம் என்றும் பெயர்.

"ஆடலில் சிறந்தவர் யார்?" என்று உமையம்மை சிவபெருமானுடன் வாதம் செய்து, போட்டி வைத்து ஆடியது குற்றாமாகி அவளைப் பாவமாகப் பிடித்தது. அதனை நீக்கத் திருப்பூவணத்தில் சிவலிங்கம் வைத்து வழிபட்டாள்.

இவ்வழிபாட்டால் காளியின் பாவம் நீங்கப் பெற்றது. காளி வழிபட்ட சிவலிங்கமானது மூலலிங்கத்திற்கு வடக்கே கூப்பிடு தூரத்தில் அமைந்துள்ளது.

காளிதேவி சபதம் கூறி சங்கரனுடன் ஆடிய இடம் தில்லையாகும். தில்லையில் காளிதேவி ஊருக்கு வெளியே தனியாகக் கோயில் கொண்டிருக்கிறாள். அதே போன்று திருப்பூவணத்திலும் ஆற்றிற்கு வடக்கே மடப்புரம் கிராமத்தில் அடைக்கலம் கொடுத்த ஐயனார் கோயிலில், காளிதேவி கோயில் கொண்டுள்ளாள்.

திருப்பூவணத்தில் விநாயகர், முருகன், வீரபத்திரன், திரௌபதி, மாரியம்மன் கோயில்களும் உள்ளன.

❖ புவனங்கள் ஏழு உள்ளன. 'புவர் உலகம், சுவர் உலகம், மகலோகம், சனலோகம், தவலோகம், சத்தியலோகம், பிரலோகம் என ஏழு உலகங்கள் உள்ளன' என்று கந்தபுராணம் கூறுகிறது. "பூலோகம், புவலோகம், சுவர்லோகம், ஜெனலோகம், தம்லோகம், சத்தியலோகம், மகாலோகம் ஆகிய ஏழும் மேலோகங்கள், அதல, விதல, சுதல, நிதல,தராதல, மகாதல, பாதாள ஆகிய ஏழு கீழ்லோகங்களும் உள்ளன".

❖ இப்பதினான்கு உலகங்களில் ஒன்றான பாதாள உலகத்திலிருந்து திருப்பூவணநாதர் முளைத் தெழுந்துள்ளார்.

❖ மூலச்சிவலிங்கத்தைப் பாதாளவீசன் என்று புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

❖ விநாயகர் திருப்பூவணத்திலே இருக்கும் பெருமை யினால், முக்கண் நிமலனை அருச்சனை செய்து முடித்தார்.

❖ திருப்பூவணத்தில் தீர்த்தங்கள் அனேகம் உள்ளன. இதனால், அதிகமான எண்ணிக்கையில் விநாயகர் கோயில்களும் உள்ளன.

❖ இத்தலத்தில் முருகனுக்குத் தனிக்கோயில் உள்ளது.

❖ அருணகிரிநாதர் திருப்பூவணத்து முருகனைப் பாடியுள்ளார்.

❖ திருப்பூவணத் திருத்தல வழிபாட்டில் வைரவர் முக்கியத்துவம் பெறுகிறார்.

புவனங்கள் ஏழு உள்ளன. 'புவர் உலகம், சுவர் உலகம், மகலோகம், சனலோகம், தவலோகம், சத்தியலோகம், பிரலோகம் என ஏழு உலகங்கள் உள்ளன' என்று கந்தபுராணம் கூறுகிறது. "பூலோகம், புவலோகம். சுவர்லோகம், ஜெனலோகம், தம்லோகம், சத்தியலோகம், மகாலோகம் ஆகிய ஏழும் மேலோகங்கள், அதல, விதல, சுதல, நிதல,தராதல, மகாதல, பாதாள ஆகிய ஏழு கீழ்லோகங்களும் உள்ளன".

இப்பதினான்கு உலகங்களில் ஒன்றான பாதாள உலகத்திலிருந்து திருப்பூவணநாதர் முளைத் தெழுந்துள்ளார்.

மூலச்சிவலிங்கத்தைப் பாதாளவீசன் என்று புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

விநாயகர் திருப்பூவணத்திலே இருக்கும் பெருமை யினால், முக்கண் நிமலனை அருச்சனை செய்து முடித்தார்.

திருப்பூவணத்தில் தீர்த்தங்கள் அனேகம் உள்ளன. இதனால், அதிகமான எண்ணிக்கையில் விநாயகர் கோயில்களும் உள்ளன

இத்தலத்தில் முருகனுக்குத் தனிக்கோயில் உள்ளது.

அருணகிரிநாதர் திருப்பூவணத்து முருகனைப் பாடியுள்ளார்.

திருப்பூவணத் திருத்தல வழிபாட்டில் வைரவர் முக்கியத்துவம் பெறுகிறார்.

❖ சித்திரை மாதம் முழுமதி நாளிலே வடுகக்கடவுளைப் பணிந்து பின்னர் சிவபெருமானை வழிபட்டு அதன் பின்னர் மணிகன்னிகைத் தீர்த்தமாடியவர்கள் அடையும் பலன்கள் கூறப்பட்டுள்ளன.

பெருமாள் கோயில்

❖ சலந்தரனைக் கொல்வதற்குச் சக்கராயுதம் பெற வேண்டித் திருமால் திருப்பூவணம் வந்து வழிபட்டார்.

❖ மகாலெட்சுமியும் திருமாலும், வைகாசி விசாக நட்சத்திரத்திலே பௌர்ணமி அன்று திருப்பூவண நாதரை (சிவலிங்கத்தை) முறைப்படி வழிபட்டனர்.

❖ திருப்பூவணத்தில் சிவன் கோயில் அருகிலேயே, 'ஸ்ரீ பூமிநீளா ரெங்கநாயகி உடனுறை ஸ்ரீ அழகிய மணவாள ரெங்கநாதப் பெருமாள் கோயில்" உள்ளது

❖ இப்பெருமாள் வடக்கு நோக்கித் (திருப்பூவண நாதர் இலிங்கத்தை நோக்கித்) தேவியருடன் அருளுகிறார்.

❖ அனைத்துப் பெருமாள் கோயில்களிலும் வடக்குவாசல் மூடியே இருக்கும். 'சொர்க்க வாசல் திறப்பு' அன்று மட்டுமே வடக்குவாசலைத் திறந்து பெருமாளை எழுந்தருளச் செய்வர்.

❖ வைகுண்டத்திலிருந்து திருமாலும் திருமகளும் திருப்பூவணம் வந்தனர். இதனால் திருப்பூவணத்தில் பெருமாளே வடக்குப் பார்த்து உள்ளார். வடக்குப் பார்த்த பெருமாள் மிகவும் தனிச்சிறப்புடையவர் ஆவார்.

* சித்திரை மாதம் முழுமதி நாளிலே வடுகக்கடவுளைப் பணிந்து பின்னர் சிவபெருமானை வழிபட்டு அதன் பின்னர் மணிகன்னிகைத் தீர்த்தமாடியவர்கள் அடையும் பலன்கள் கூறப்பட்டுள்ளன.

பெருமாள் கோயில்

* சலந்தரனைக் கொல்வதற்குச் சக்கராயுதம் பெற வேண்டித் திருமால் திருப்பூவணம் வந்து வழிபட்டார்.

மகாலெட்சுமியும் திருமாலும், வைகாசி விசாக நட்சத்திரத்திலே பௌர்ணமி அன்று திருப்பூவண நாதரை (சிவலிங்கத்தை) முறைப்படி வழிபட்டனர்.

திருப்பூவணத்தில் சிவன் கோயில் அருகிலேயே, 'ஸ்ரீ பூமிநீளா ரெங்கநாயகி உடனுறை ஸ்ரீ அழகிய மணவாள ரெங்கநாதப் பெருமாள் கோயில்" உள்ளது

இப்பெருமாள் வடக்கு நோக்கித் (திருப்பூவண நாதர் லிங்கத்தை நோக்கித்) தேவியருடன் அருளுகிறார்.

அனைத்துப் பெருமாள் கோயில்களிலும் வடக்குவாசல் மூடியே இருக்கும். 'சொர்க்க வாசல் திறப்பு அன்று மட்டுமே வடக்குவாசலைத் திறந்து பெருமாளை எழுந்தருளச் செய்வர்.

வைகுண்டத்திலிருந்து திருமாலும் திருமகளும் திருப்பூவணம் வந்தனர். இதனால் திருப்பூவணத்தில் பெருமாளே வடக்குப் பார்த்து உள்ளார். வடக்குப் பார்த்த பெருமாள் மிகவும் தனிச்சிறப்புடையவர் ஆவார்.

❖ இங்கு எந்த நாளில் வழிபட்டாலும் சொர்க்க வாசல் திறப்பு அன்று வழிபடும் பலன் கிடைக்கும்.

❖ அதேநாளில் திருப்பூவணநாதரை வணங்கினால் பாவங்கள் யாவும் பற்றறுந்து விடும். நல்ல சந்ததிகளுடன் அரசராய் வாழ்வர்.

❖ பஞ்சாமிர்தம், பஞ்சகவ்வியம் இவற்றைப் பூவணே சுவரருக்குக் காட்டுவோர் அரிய பலன்களை அடைவர். பின்னர் சிவனடியில் சேர்வர்.

❖ திருக்கோயிலில் விளக்கு ஏற்றுவோர், சிவபுரத்தில் கோடிக்கணக்கிலான தங்களது குலத்துடன் கூடி வாழ்வார்கள்.

❖ திருப்பூவணநாதருக்குப் பூமாலை சாத்தி வழிபட்டால் எண்ணிய காரியங்கள் நடைபெறும். மிகுந்த செல்வம் பெற்று வாழ்வர். கயிலையில் இனிது வாழும் பேறு கிடைக்கப் பெறுவர்.

❖ திருப்பூவணநாதரின் முன்புள்ள (மொட்டைக் கோபுரத்தைக் கட்டுவோர்க்கு, அவர்கள் செய்யும் நற்செயல்களுக்கான புண்ணியங்கள் நான்கு மடங்காகக் கிடைக்கும்.

❖ திருப்பூவணத்திலே தினவிழா, திருவிழா தேர்த்திருவிழா நடத்துவோர் சிவபிரானுடன் சிவபுரியில் சேர்வர்.

❖ உயிரும் உடலும் ஒத்துணரத் திருப்பூவண நாதரைக் கற்றுணர்ந்தோரும், திருப்பூவணத்திற்கு வந்து

இங்கு எந்த நாளில் வழிபட்டாலும் சொர்க்க வாசல் திறப்பு அன்று வழிபடும் பலன் கிடைக்கும்.

* அதேநாளில் திருப்பூவணநாதரை வணங்கினால் பாவங்கள் யாவும் பற்றறுந்து விடும். நல்ல சந்ததிகளுடன் அரசராய் வாழ்வர்.

பஞ்சாமிர்தம், பஞ்சகவ்வியம் இவற்றைப் பூவணே சுவரருக்குக் காட்டுவோர் அரிய பலன்களை அடைவர். பின்னர் சிவனடியில் சேர்வர்.

திருக்கோயிலில் விளக்கு ஏற்றுவோர், சிவபுரத்தில் கோடிக்கணக்கிலான தங்களது குலத்துடன் கூடி வாழ்வார்கள்.

திருப்பூவணநாதருக்குப் பூமாலை சாத்தி வழிபட்டால் எண்ணிய காரியங்கள் நடைபெறும். மிகுந்த செல்வம் பெற்று வாழ்வர். கயிலையில் இனிது வாழும் பேறு கிடைக்கப் பெறுவர்.

திருப்பூவணநாதரின் முன்புள்ள (மொட்டைக் கோபுரத்தைக் கட்டுவோர்க்கு. அவர்கள் செய்யும் நற்செயல்களுக்கான புண்ணியங்கள் நான்கு மடங்காகக் கிடைக்கும்.

திருப்பூவணத்திலே தினவிழா, திருவிழா தேர்த்திருவிழா நடத்துவோர் சிவபிரானுடன் சிவபுரியில் சேர்வர்.

உயிரும் உடலும் ஒத்துணரத் திருப்பூவண நாதரைக் கற்றுணர்ந்தோரும், திருப்பூவணத்திற்கு வந்து

வழிபட்டோரும் புனிதமான உடலைப் பெற்றுக் கயிலையைச் சேர்ந்து வாழ்வர்.

❖ திருப்பூவணத்திலே, நான்கு வேதங்களையும் கற்றுணர்ந்தோருக்கு அணுஅளவு தானம் செய்தாலும் அது மலையளவு கொடுத்த பலன் உண்டாகும்.

❖ திருப்பூவணத்திலே பிடியளவு அன்னதானம் கொடுத்தாலும் அது கோடி அந்தணருக்கு அறுசுவை உணவு வழங்கிய பலன் உண்டாகும்.

❖ திருப்பூவணநாதரை வழிபட்டால் பிணிகள் (நோய்கள்) நீங்கும். நன்மை உண்டாகும்.

❖ திருப்பூவணநாதரை வழிபட்டோருக்குப் பீடை இல்லை.

❖ திருப்பூவணநாதரை வழிபட்டோர் சிவனது உருவத்தைப் பெறுவர்.

திருப்பூவணநாதர் திருவடியே போற்றி
மின்னனையாள் திருவடியே போற்றி
திருச்சிற்றம்பலம்



பிரிண்டெக் ● மதுரை © 0452 – 2335748

வழிபட்டோரும் புனிதமான உடலைப் பெற்றுக் கயிலையைச் சேர்ந்து வாழ்வர்.

திருப்பூவணத்திலே, நான்கு வேதங்களையும் கற்றுணர்ந்தோருக்கு அணுஅளவு தானம் செய்தாலும் அது மலையளவு கொடுத்த பலன் உண்டாகும்.

திருப்பூவணத்திலே பிடியளவு அன்னதானம் கொடுத்தாலும் அது கோடி அந்தணருக்கு அறுசுவை உணவு வழங்கிய பலன் உண்டாகும்.

திருப்பூவணநாதரை வழிபட்டால் பிணிகள் (நோய்கள்) நீங்கும். நன்மை உண்டாகும்.

திருப்பூவணநாதரை வழிபட்டோருக்குப் பீடை இல்லை.

திருப்பூவணநாதரை வழிபட்டோர் சிவனது உருவத்தைப் பெறுவர்.

திருப்பூவணநாதர் திருவடியே போற்றி

மின்னனையாள் திருவடியே போற்றி

திருச்சிற்றம்பலம்

பிரிண்டெக், மதுரை - 0452 2335748

காசிஸ்ரீ கி. காளைராசன்



இப்புத்தகத்தை அச்சிட்டு வெளியிட நிதியுதவி வழங்கிய பெருந்தகையாளர்

வழக்கறிஞர் திரு.ச.சண்முகநாதன் B.A.,BL.

திருமதி சண்முகநாதன்

471. மெயின் ரோடு. கோட்டை.

திருப்பூவணம்.

காசிஶ்ரீ கி. காளைராசன்

அன்னதானம் கண்தானம், இவ்விரண்டு தானங்களையும் சிவபெருமான் ஏற்றுக் கொள்கிறார்.

திருப்பூவணம் ஸ்ரீ பொன்னனையாள் அன்னதான அறக்கட்டளை (80 G வரிவிலக்கு பெற்றது)

THIRUPOOVANAM SRI PONNANAIYAL ANNADHANA TRUST, THIRUPPUVANAM - 630 106, Sivagangai District.

12 A Registration Number AAETT2824KE20211



80 G Approval Number AAETT2824KF20227

STATE BANK OF INDIA,
A/C No. 307 101 349 77,
IFSC : SBIN 0011 064,
CIF Number : 854 743 025 67,



நிறுவுனர் தலைவர் –
ஸ்ரீலஸ்ரீ மாதாஜி அவர்கள்,
அருள்மிகு ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரித்யங்கிராதேவி திருக்கோயில்,
வேதியரேந்தல் விலக்கு,
மானாமதுரை.

தலைவர் –
பேராசிரியர் திரு. இராம. திண்ணப்பன்
செட்டியார், தேவகோட்டை.

துணைத்தலைவர் –
திரு. பழ. சோமசுந்தரம் செட்டியார்,
தேவகோட்டை, (இருப்பு-மதுரை) - 93606 53798

செயலாளர் – காசிஸ்ரீ முனைவர் நா.ரா.கி. காளைராசன்,
கோட்டையூர் – 944 350 1912, 824 826 6418

இணைச் செயலாளர் – திரு. உமாசேகர், தெய்வீகப் பேரவை, திருப்பூவணம்

கூடுதல் செயலாளர் – திரு. மு. ரவி, நெல்முடிகரை, திருப்பூவணம்

பொருளாளர் – திரு. சுவா. முத்துக் குமாரசாமி, பஜார் தெரு, கோட்டை, திருப்பூவணம் - 97913 72414

காசிஸ்ரீ கி. காளைராசன்


ஐந்து கலசங்களுடன் உள்ள திருப்பூவணநாதர்
கருவறை விமானம்